Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 01 புதன்கிழமை (17.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 017



ஒழிப்பு தீவிரம்

03




சாதகமாக அமையுமா?

05

உங்களை விற்கிறது




10



நம்ப நட நம்பி...

14



29 வயதில் முதுமை

18

# மாதகலில் மீள்குடியமர்வு

## நடவடிக்கைகள் துரிதம்



(சண்டிலிப்பாய்)

மாதகல் மேற்குப் பிரதேசத்தில் இருந்து படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து அப்பகுதி முழுவதும் மீள் குடியமர்வுக்காக பொதுமக்களிடம் கையளிக்கப்படவிருக்கிறது. இதன் முன்னேற்பாடாக எதிர்வரும் 20 ஆம் திகதி பொது மக்களின் காணிகள் அவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவிருக்கிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான விசேட குழுவினர் அப்பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து களநிலைவரங்களை மேற்பார்வை செய்யவுள்ளனர். அத்துடன் மக்களின் மீள்குடியமர்வுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் பொருத்தமான பணிப்புரைகளைச் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகா மீது ஐ.தே.க. சீற்றம் நன்றி கெட்டவர் என்றும் சாடல்

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான சரத் பொன்சேகா எதிரணியை பிளவுபடுத்துவதற்கு முயற்சிக்கின்றார் என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசாங்கத்தின் கூலியுடனேயே அவர் இந்த முயற்சியை மேற்கொள்கின்றார் என கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க., சரத் பொன்சேகாவுக்கு உதவி வழங்கியமையை அவர் மறந்துவிடக் கூடாது. அவர் கட்சி உள்விவகாரங்களில் தலையிடாமல் எம்முடன் இணைந்துகொள்ள வேண்டும்.

ஐ.தே.க. பிறிதொரு எதிரணியுடன் இணைந்துகொள்ளாது. நாம் ஏற்கனவே எதிரணி ஒன்றை உருவாக்கியுள்ளோம். இந்த எதிரணியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மௌபீம லங்கா பெரமுனை தலைவருமான ஹேமகுமார நாணயக்கார, ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் ஸ்ரீமஸ்ரீ ஹப்புயாராய்ச்சி ஆகியோர் இணைந்துகொள்ளத் தீர்மானித்துள்ளனர் என்றார்.

மேலும், சரத் பொன்சேகா ஒரு நன்றி கெட்டவர் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போதே

19 ஆம் பக்கம் பார்க்க

## அகதிகள் படை எடுப்பை தடுத்து நிறுத்துவது எப்படி

### ஆஸி. அதிகாரிகள் கொழும்புக்கு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து அவுஸ்ரேலியா நோக்கிப் படகு அகதிகள் படையெடுப்பதைத் தடுத்து நிறுத்துவது எப்படி என்று இரு நாட்டு அதிகாரிகளும் கூடி ஆராயவுள்ளனர்.

இதற்காக அவுஸ்ரேலிய எதிர்க்கட்சியின் இரண்டு விசேட பிரதிநிதிகள் மிக விரைவில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் இருந்து அகதிகள் அவுஸ்ரேலியாவுக்கு பயணிப்பதை தடுப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை களை நடத்தும் பொருட்டு அவர்கள் இலங்கைக்கு அவசரமாக விஜயம் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.நீதிபதி இடமாற்றத்தின் பின்னணி விக்கிலீக்ஸ் அதிர்ச்சித் தகவல்

### காலம் கடந்து கசிகிறது

(கொழும்பு)

யாழில் மனித உரிமை மீறல் வழக்குக்ளைக் கையாண்ட நீதிபதியை பழிவாங்கும் நோக்குடன் அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இராணுவத்திற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்ட மனுவை விசாரணை செய்தமையாலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் இணையம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கினால் இந்தத் தகவல அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை மேற்

19 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு தீவிரம் நேற்றும் அறுவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்றும் அறுவர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்கார்கி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் திருநெல்வேலி மற்றும் குருநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் யாழ். போதனா வைத்தியசாலை

19 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை வீரர் பலி

நெடுந்தீவு கடற்பரப்பில் கடமையில் இருந்தவேளை மின்னல் தாக்கியதில் கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அலுகேன வீதி, பாதுக்க பகுதியைச் சேர்ந்த எம்.ஏ. லஹிரு என்பவரே உயிரிழந்தவராவார்.

இறந்தவரின் சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



மரணத்தின் விளிம்பைத் தொட்டது குருமன்காடு விபத்து

## போக்குவரத்து ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் இன்று காலை அடையாள வேலை நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு திட்டமிட்டிருக்கின்றனர்.

தமக்கு உரிய திகதியில் கிரமமாக சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள கின்றனர்.

இன்று காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை இப்போராட்டம் இடம்பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (17, 109)



யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் ஆசிரியர் தினம் கடந்த வாரம் நடைபெற்றபோது அதிபர் எப்.எக்ஸ்.அன்ரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களாலும், பெற்றோர்கள், கல்லூரியின் நலன் விரும்பிகளாலும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பழைய மாணவரான அருட்பணி செ.ஜெபதாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (105)

# பருத்தித்துறை சாலைக்கு உற்சவ காலத்தில் அதிக வருமானம்

(வடமராட்சி)

வடமராட்சி இந்து ஆலயங்களில் நடைபெற்ற விசேட உற்சவதினங்களின் போது இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை சாரதி, நடத்துனர்களின் அர்ப்பணிப்பான சேவை மூலம் இவ்வருடம் அதிகவருமானம் கிடைத்துள்ளதாகப் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் கந்தையா கந்தசாமி தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் துன்னாலை வல்லிபுரம் ஆழ்வார் ஆகிய ஆலயங்களில் உற்சவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. இதன்போது சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய விசேட தினங்களில் பக்தர்களின் நலன் கருதிய அர்ப்பணிப்பான சேவை மூலமே வருமானம் கிடைத்துள்ளது.

இதன் போது தொண்டைமானறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சேவை மூலம் 17 இலட்சத்து 53 ஆயிரத்து 635 ரூபா வருமானமும், துன்னாலை வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தின் சேவை மூலம் 16 இலட்சத்து 67 ஆயிரத்து 90 ரூபா 50 சதமும் வருமானமாகக் கிடைத்துள்ளது. இவ்விரு ஆலயங்களின் சேவைக்கென பருத்தித்துறைச் சாலைக்கு சொந்தமான சுமார் 32 பஸ்களின் மூலமே இவ்வருமானம் கிடைத்துள்ளது.

பக்தர்களின் மேலதிக சேவைக்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, காரைநகர் பகுதிச் சாலையிலிருந்தும் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அத்துடன் நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்துக்கு இரவு பகல் சேவையை செய்திருந்தாலும் பெரிதாக வருமானம் கிடைக்கவில்லை.

மேலும் எதிர்காலத்தில் ஆலய உற்சவ தினங்கள் மட்டுமல்ல ஏனைய நாட்களிலும் இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறைச் சாலைச் சாரதிகள், நடத்துனர்களின் அர்பணிப்பான சேவைக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும் என்றார். (116)

# கல்விக் கருத்தரங்கு

(அச்சுவேலி)

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு இந்த வருடம் தோற்றவுள்ள தரம் 11 இல் கல்வி பயின்று வரும் மாணவர்களில் கணித பாட அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்களுக்கு யாழ்.கல்வி வலய கணிதப்பிரிவினால் ஒழுங்கு செய்து நடாத்தப்படும் விசேட கணித பாட வழிகாட்டல் கருத்தரங்கு இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கானது கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இன்று புதன்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 02.00 மணிவரை புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியிலும், நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு நாளை வியாழக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 02.00 மணிவரை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி கருந்தரங்கில் ஏனைய மாணவர்களுடன் கணித பாடத்தின் விசேட செயற்றிட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களையும் உரிய நேரத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலையங்களிற்கு தவறாது கலந்து கொள்ள அனுப்பிவைப்பதற்கு ஆவன செய்யுமாறும் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)

# வவுனியா பொது நூலகத்தில் பார்வையற்றோருக்கு புதிய பகுதி

(வவுனியா)

வவுனியா அரிமா சங்கத்தின் அனுசரணையுடன் வவுனியா நகரசபை மற்றும் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இணைந்து நடாத்திய சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு வவுனியா நகரசபை தலைவர் ஐ.கனகையா தலைமையில் வவுனியா பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வவுனியா பொது வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி எம். மலரவன், அரிமா சங்க பிராந்தியத் தலைவர் அரிமா வைத்தியகலாநிதி ஐ.ஜி. சந்திரசேகரம், ஒகன் நிறுவனத்தின் தலைவர் வி. சுப்பிரமணியம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்த இந் நிகழ்வில் பார்வையற்றோருக்கு பொது நூலகத்தில் புதிய நூலக பகுதி திறந்து வைக்கப்பட்டதுடன் வெள்ளை பிரம்பு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (160)


# கண்ணீர்க் காணிக்கை



## தேசகீர்த்தி க.முதலியார்

மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த தேசகீர்த்தி
திரு.க.முதலியார் அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார்,
உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய்

செந்தில்லிங்கம் (லண்டன்)
கார்த்திகேயன், திலீபன்,
லதன்

(C/2076)


# கரப்பந்தாட்டம்

(சாவகச்சேரி)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினர் தென்மராட்சி ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டப் போட்டியின் மூன்றாவது அரையிறுதிப் போட்டிகள் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அரையிறுதிப்போட்டியில் தென்மராட்சி ரீதியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி வளர்மதி வி.கழகம், மாவட்ட ரீதியில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

மேலும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (11)

# கையெழுத்துப்பிரதி வெளியீடு

(பருத்தித்துறை)

மாதனை மெ.மி.த.க. பாடசாலையில் உளவளம் தொடாபான கையெழுத்து பிரதிகள் வெளியீட்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வு பருத்தித்துறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றுள்ளதுடன் இவர் இதனை ஆரம்பித்துவைத்தார்.

இக்கையெழுத்து பிரதிகளை இப்பகுதி மக்களில் பெருமளவானோர் பார்வையிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (109)

# வாய்க்கால் சீரின்மையால் தேங்கிநிற்கும் வெள்ளநீர்

(கரணவாய்)

நெல்லியடி பஸ் நிலையப்பகுதியில் மழைகாலங்களின் போது தேங்கும் வெள்ள நீர் வழிந்தோடமுடியாமல் தேங்கி நிற்பதுடன் கடைகளுக்குள்ளும் வெள்ள நீர் உட்செல்லும் நிலை காணப்படுவதாக பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நெல்லியடி பிரதான வீதி திருத்தும் வேலைகள் இடம்பெற்றுவரும் நிலையில் வீதியின் இருமருங்கிலும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக நெல்லியடி பஸ் நிலையத்தின் இரு பக்கங்களிலும் வியாபார நிலையங்கள் காணப்படுகின்றது.




இந்நிலையில் இருபக்கங்களிலும் தேங்கிநிற்கும் வெள்ள நீர் வழிந்தோட இடமில்லாது தொடர்ச்சியாகத் தேங்கி நிற்பதுடன் கடைகளுக்குள் உட்புகும் நிலையும் காணப்படுகிறது.

இந்நிலையில் இப்பகுதியில் 20 வருடங்களுக்கு முன் இரண்டுபக்கமும் கழிவு நீர் ஓடும் வடிகால்கள் இருந்தன. தற்போது இந்த வடிகால்கள் மூடி பராமரிப்பற்ற நிலையில் காணப்படுகின்றது.

தற்போது மழை காலம் ஆரம்பமாகியுள்ளதால் டெங்கு நுளம்புத் தாக்கம் பரவலாக அதிகரிக்கும் வாய்ப்புக் காணப்படுகிறது.

இதேவேளை நெல்லியடி எரிபொருள் நிலையத்திற்கும் பொலிஸ் நிலையத்துக்கும் முன்பாக உள்ள பாலத்தால் மழை நீர் வழிந்தோட முடியாமல் விக்கினேஸ்வரா வீதிப் பகுதியில் இருக்கும் குடிமனைகளுக்குள் புகும் நிலையும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு வெள்ள நீர் தேங்கி நிற்காதவண்ணம் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வீதி அதிகார சபை மற்றும் பிரதேச சபையிடம் இப்பகுதி மக்களும் வியாபாரிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (18)

உடையார்கட்டு குரவில் தமிழ் வித்தியாலயத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், 'குரவில் ஊற்று' மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், வித்தியாலய அதிபர் செ.மேகநாதன் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனுக்கு நூலை வழங்குவதையும், கலந்து கொண்ட மாணவர்களையும், விருந்தினர்களையும் காணலாம். (படங்கள்: ஜெ.கலையகன்)

# ஆன்மிகத்திலும் ஈடுபாடு உடையவர்களாக பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும்.

– அரச ஓய்வு நிலை வைத்தியர் சோதிமயம் –



(வடமராட்சி)

ஆன்மிக ஈடுபாடு கொண்ட பிள்ளைகளாக ஒவ்வொரு தாய்மார்களும் தமது பிள்ளைகளை வளர்த்தெடுக்க முன்வர வேண்டும் என அரசாங்க ஓய்வு நிலை வைத்தியர் சி.சோதிமயம் தெரிவித்துள்ளார்.

வல்வை கணபதி படிப்பகத்தின் 45 ஆவது ஆண்டு விழாவும், பாலர்தின விழாவும் அண்மையில் வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் கணபதி படிப்பகத்தின் தலைவர் ச.ஜெயகணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்களிடையே ஆன்மிக சிந்தனையை வளர்த்தெடுக்கும் நோக்கில் சில தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களின் ஆன்மிக ஈடுபாட்டிற்காக வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய கிழமை நாட்களில் விடுமுறை வழங்கப்படுகிறது.

ஆகவே அச்சந்தர்ப்பத்தை யாவது பயன்படுத்தி ஒவ்வொரு பெற்றோர்களும் தத்தமது பிள்ளைகளை ஆன்மிக வழிபாட்டில் அக்கறையுடையவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும். இதனால் வளர்ந்து வரும் குழந்தைகள் கடவுளுக்கும் மனசாட்சிக்கும் பயந்து வாழும் நிலையும் குற்றம் குறைகளைச் செய்வதும் குறைந்து காணப்படும். எனவேதான் ஆன்மிக வழிபாட்டை உங்களது பிள்ளைகளுக்கு சிறுவயதிலிருந்தே பெற்றோர்களாகிய நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டும்.

கால கட்டத்தில் பிள்ளைகள் தாய் தந்தையோடு மட்டுமல்ல ஆசிரியப்பெருந்தகைகளோடே அதிகமான நேரத்தைச் செலவழிக்கின்றனர். குறிப்பாக பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களில் தான் செலவழிக்கின்றனர. எனவே பிள்ளைகளின் நன்னடத்தையில் தாய் தந்தை முதல் ஆசிரியர்களுக்கும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (116)

# கொட்டடிச் சந்தைக்கு முதல்வர் திடீர் விஜயம்



யாழ்.கொட்டடி சந்தையை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் கொட்டடி சந்தைக்கு விஜயம் செய்த யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கொட்டடி சந்தை வியாபாரிகள் மற்றும் அதனைச் சூழ உள்ள பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபாரிகளின் குறைகளைக் கேட்டறிந்து அக்குறைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இச்சந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் குவிந்து கிடந்த கழிவுகளை உடனடியாக அகற்றுமாறும் முதல்வர் துறைசார்ந்த அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# நெற்செய்கை மும்முரம்

(அச்சுவேலி)

பருவமழை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் நெற் செய்கையில் பெரு முனைப்புடன் ஈடுபட்டு வருவதைப் பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது. சில பிரதேசங்களில் கடந்த சில வாரங்களிற்கு முன்னர் விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட தொடங்கயிருந்த போதிலும் கடந்த வாரம் பெய்த கன மழையினைத் தொடர்ந்து விதைப்பு நடவடிக்கைகளில் பெருமளவு விவசாயிகள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக வலிகாமம் கிழக்கின் அச்சுவேலி, ஆவரங்கால் புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, கோப்பாய் இருபாலை, மற்றும் வடமராட்சியின் கரவெட்டி, உடுப்பிட்டி, புறாப்பொறுக்கி போன்ற பகுதிகளிலும், தென்மராட்சிப் பகுதியிலும் ஏற்கனவே பண்படுத்தித் தயார் நிலையில் பேணப்பட்ட வயல்நிலங்களிலேயே தற்போது விவசாயிகள் நெல் விதைப்பில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

# வேலணையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



அண்மைக் காலமாக யாழ்.குடாநாடு உட்படத் தீவகப் பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதும், இந் நோயினால் சில உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

எனவே இதனைத் தடுக்கும் முகமாக வேலணை பிரதேச சபை, தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், அப்பகுதி மக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை காலை 09.00 மணி முதல் வேலணை பிரதேச சபையின் அனைத்து உத்தியோகத்தர்களாலும் சபையின் தலைமை அலுவலக வளாகம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இத் துப்புரவுப் பணிகளை முன்னெடுக்க சபைத் தவிசாளர் சி.சிவராசா பணிப்புரை விடுத்ததுடன், மேற்படி பணிகளில் தனது பங்களிப்பையும் நெறிப்படுத்தலையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் கிளை நூலகத்தில் மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்குடன் நல்லூர் கிளை நூலகம் பல்வேறு செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்த வகையில், பிரதேச மாணவர்கள் மற்றும் நூலக அங்கத்தவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடாத்தவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் வாசகர்கள் தமது பெயர் விபரங்களை நல்லூர் கிளை நூலகம் மாநகரசபையில் நாளை வியாழக் கிழமைக்கு முன்பதாக பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

இப்போட்டியில் 4 முதல் 6 வயது வரை சித்திரம் வர்ணம் தீட்டுதல் போட்டியும், 7 முதல் 10 வயது வரை சித்திரம் வரைதல், தரம் 1 முதல் 4 வரை கதை சொல்லும் போட்டியும் தரம் 1 முதல் 5 வரை திருக்குறள் மனனப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

மேலும் கட்டுரைப் போட்டியில் 15 வயதிற்கு கீழ்ப்பட்டோருக்கு 'பாடசாலை கல்வியில் பொது நூலகங்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பிலும் 17 வயதுக்கு மேற்பட்டோருக்கு சமூக மேம்பாட்டில் பொது நூலகங்கள் என்னும் தலைப்பிலும் அமைதல் வேண்டும்.

பொது அறிவுப் போட்டி அனைத்தும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளதாகவும் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் குறித்த திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறும் நூலகர் திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன் அறிவித்துள்ளார்.

# வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

(கிளிநொச்சி)

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட விசேட தேவைப்பாடுகளையுடைய நபர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் தருமபுரம் நெசவு நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் 40 இற்கு மேற்பட்ட பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் மற்றும் பயிற்சியாளர்களும் 40 இற்கு மேற்பட்ட விசேட தேவைப்பாடு தேவையுடையவர்களும் கலந்து கொண்டர்.

மனப்பாங்கை மேம்படுத்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல், ஆளுமை விருத்தி, சட்ட ஆவணங்களும் உரிமைகளும் போன்ற தொனிப்பொருட்களில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.எல்.எம்.ஹஸீம், தேசிய ஒருமைப்பாடு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.உமாநாத், கண்டாவளை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர், மாவட்ட சமூகக சேவை உத்தியோகத்தர் மற்றும் வளவாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (142)

வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் முதல் இடத்தைப் பெறுவது என்று பொருள் அன்று. வெற்றி பெற்றாய் என்றால் உன் செயல்பாடு சென்ற முறையை விட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று பொருள்.

*- லியோ டால்ஸ்டாய்*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## கஷ்டங்கள் உண்டுதான்; சாவுகளில்லை!

இவ்வருட அமைதிக்கான நோபல் விருது ஐரோப்பிய ஒன்றியத்திற்கென அறிவித்து, நோபல் பரிசுக் குழு தெரிவித்திருக்கும் காரணமும், அதற்கு வந்த விமர்சனங்களுக்கான பதிலும் நம் கவனத்துக்குரியது. போர்கள் நடக்கும் கண்டமாக இருந்த பிரதேசத்தை, அமைதி தவழும் பிராந்தியமாக மாற்றுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவியிருப்பதாக நோர்வேயைத் தலைமையகமாகக் கொண்ட விருதுக்குழு தெரிவித்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளில் அநேகம் இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன. வேலையின்மை, விலைவாசி பிரச்சினைகளால் நாடுகளுக்கு இடையே உறவுகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதுதான் சரியான வழி என்ற கருத்து வலுவடைந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் ஐரோப்பா அமைதிப் பூங்காவாக விளங்க ஒன்றியம்தான் காரணம் என கூறி அமைதி விருது வழங்குவது பொருத்தமில்லாத நடவடிக்கை என்ற விமர்சனத்திற்கும் குழு சார்பில் பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

'மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் சாகவில்லைதானே' என்று ஒரு மாணவி சொன்ன கருத்தைச் சுட்டிக்காட்டி, எல்லா நாடுகளும் யுத்த பூமியாக காட்சியளித்த காலத்தில் இருந்து மாறி வெறுமனே வாய்ச்சண்டை போடும் அளவுக்கு வந்திருப்பதே பெரிய மாற்றம்தான் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவே விருது கொடுக்கப்பட வேண்டிய சமாதானச் சூழல் உருவாக்கம் தான் என்றிருக்கிறார்கள்.

நமது நாட்டிலும் இந்த சூழ்நிலையே இன்றிருப்பதால் இதிலுள்ள நியாயத்தை விளங்கிக்கொள்ள முடியும். யுத்தம் முடிந்திருக்கிறதே தவிர நமது பிரச்சினை இன்னும் தீரவில்லை; தீர்வு வந்துசேரவில்லை. மக்களின் கஷ்டங்கள் முற்றாகத் தீர்க்கப்படவில்லை. எதிர்காலம் குறித்த நம்பிக்கை உண்டாவதற்கு எவ்வளவோ செய்யப்பட வேண்டியிருக்கிறது. இந்தத் தீவின் சமூகங்களுக்கிடையிலான பகைத் தணிவும் இணக்கமும் ஏற்பட எடுக்கப்படும் நடவடிக்கைகள் போதவில்லை.

ஆனாலும், இப்போது யுத்தம் இல்லை. உயிரைக் கையில் பிடித்து ஓடும் அச்சம் இல்லை. குண்டுவீச்சுகள் இல்லை. அழிவுகள் இல்லை. அவலக் கதறல்கள் இல்லை. முன்னதோடு ஒப்பிடுகையில் இது பரிசுக்குரிய சூழல்தான். ஆனால் அழிவுகளில் அரசியல் லாபம் ருசித்தவர்களுக்கு இதை ஒப்புக்கொள்ள முடிவதில்லை. சாதாரண மக்கள் இந்த சமாதானச் சூழலுக்கு வந்து நிம்மதிப்பெருமூச்சு விடுகிறார்கள் என்பதைத் தாங்க முடிவதில்லை.

எனவே, இதை ஒரு முன்னேற்றப் படியாக எடுத்துக் கொண்டு அடுத்தடுத்த படிகளுக்கு மேலேறிச் செல்வதை யோசிக்காமல், கடந்துபோன காலம்தான் பொற்காலம் என்று மக்களைப் பின்னுக்குத் தள்ளுவதிலேயே மும்முரமாயிருக்கிறார்கள். யுத்தம் முடிந்ததில் அதிருப்தி கொண்டவர்களாகவே அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் மேலும் மேலும் கஷ்டப்படுவதிலேயே அவர்களுக்குத் தங்களது பதவிகளுக்கான உணர்ச்சிகர மேடைகளைப் போட்டுக்கொள்ள முடிகிறது.

மக்களை கஷ்டங்களிலிருந்து விடுவித்து, நடைமுறைச் சாத்தியமான வழிகளில் அவர்களது வாழ்வை மேலெடுத்துச் செல்வதற்கான எந்த எத்தனங்களும் இவர்களிடமில்லை. மாறாக, இப்போது கிடைத்திருப்பதை விட யுத்த சூழலில் அதிகமான எம்பிக்களைப் பெற முடிந்ததே என்ற ஏக்கத்தினைத் தான் இவர்களது நடவடிக்கைகள் காண்பிக்கின்றன.

- ஆசிரியர்

# மதுப்பிரியர்கள் அட்டகாசம்

# பேருந்துகளில் உச்சநிலை

(வடமராட்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு இரவு நேர சேவையில் ஈடுபடுத்தப்படும் அரச பேருந்துகளில் மதுப்பிரியர்களின் நாகரிகமற்ற செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால் பயணிகள் மத்தியில் அச்சம் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 751 இலக்கப் பாதையூடாகப் பயணிக்கும் தனியார் சிற்றூர்திகள் மாலை 6.30 மணியின் பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்படாத நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பேருந்துகள் இரவு சேவையில் ஈடுபடுத்தப்படும் போதே இடைநடுவில் வழிமறித்து ஏறும் மதுப் பிரியர்களே அநாகரிகமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறித்த பாதையூடாகப் பயணம் செய்யும் பெண் பயணிகளைக் கண்டவுடன் தள்ளிவிட்டு அருகில் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு தகாத வார்த்தைப்பிரயோகம், அங்கசேட்டைகளில் ஈடுபடுவது போன்ற அநாகரிகமான செயற்பாடுகளில் ஈடுபடுவதால் யுவதிகள் பேருந்தில் பயணம் செய்யும் போது அச்ச நிலையுடன் செல்லவேண்டியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நடத்துனரிடம் முறையிட்டால் தாம் சோதித்துப் பயணிகளை ஏற்றவும் முடியாது ஏற்றிய பின் இறக்கவும் முடியாது அப்படி இறக்கிவிட்டால் தமக்கு வேலை இல்லாமல் போய்விடும். மதுப் பிரியர்களைக் கண்டால் தமக்கு அச்சமுள்ளது எனவும் இதற்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தான் அவர்களை இறக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் அதற்கு முன் அவர்கள் இறங்கி விடுவார்கள் என பொறுப்பற்ற விதத்தில் கூறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(116)

# வாசிப்புப்பழக்கத்தை மேம்படுத்த வவுனியா நூலகத்தில் போட்டிகள்

(வவுனியா)

தேசிய வாசிப்பு மாதம் மற்றும் உள்ளூராட்சி வாரத்தில் கல்வி மற்றும் நூலக அபிவிருத்தி தினத்தை முன்னிட்டு வவுனியா நகரசபை பொது நூலகம் அருகி வரும் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வாசகர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளது.

இதன் நிமித்தம் 15 தொடக்கம் 18 வயதுக்குட்பட்டோருக்கு வாசிக்க மறுப்பவன் யோசிக்க மறுக்கின்றான் எனும் தலைப்பில் சிறுகதையும் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு எதிர்காலத்தில் வாசிப்பு எனும் தலைப்பில் கவிதைப்போட்டியும் இடம்பெறவுள்ளது.

கவிதைப்போட்டியில் மரபுக் கவிதையாக இருப்பின் 20 வரிகளுக்கு குறையாமலும் புதுக்கவிதையாயின் 40 வரிகளுக்கு குறையாமலும் இருப்பதுடன் அனைத்து ஆக்கங்களையும் நூலகர், பொது நூலகம், நகர சபை, வவுனியா எனும் முகவரிக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை பாலர் பாடசாலை மாணவர்களுக்கான கதை சொல்லும் மற்றும் பாடல் போட்டி நிகழ்வுகளும் நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்று வருகின்றது.

(160)

# அழுக்குத்துணி துவைத்த கட்டணம் செலுத்தப்படவில்லை

(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகள் 60 ரூபா கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டியிருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவாரப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறையில் சரத் பொன்சேகா இருந்த போது, அங்குள்ள அழுக்குத் துணிகளை துவைக்கும் பிரிவில் பொன்சேகா ஒருநாள் பணியாற்றியுள்ளார்.

அதற்கு 60 ரூபா வேதனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதனையும் சிறைச்சாலை அதிகாரிகள் சரத் பொன்சேகாவுக்கு வழங்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாதாரண 60 ரூபா கட்டணத்தை வழங்க முடியாதுள்ள அரசாங்கம், எவ்வாறு மக்களின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# வவுனியாவில் நடமாடும் சேவை

(வவுனியா)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வவுனியா நகரசபையினால் "செயற்றிறனுள்ள உள்ளூராட்சி சேவையின் மூலம் சுபீட்சமான எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில் நடமாடும் சேவையொன்றினை இன்று காலை 9 மணிமுதல் 3 மணி வரை வவுனியா குருமன்காடு கலைமகள் சனசமூக நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

இந் நடமாடும் சேவையின் மூலமாக ஆதனங்களுக்கான வரி செலுத்துதல், ஆதனங்கள் சார்பான பெயர் மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளல், காணி பிரிவிடுக்கைக்கான பரிசீலனை செய்தல், கட்டட அனுமதி விண்ணப்பங்கள் பரிசீலனை செய்தல், வியாபார உரிமம் வழங்குதல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல், முச்சக்கரவண்டிக்கான வருடாந்த தரிப்பிட அனுமதி வழங்குதல், நூலக அங்கத்துவம் புதிதாகப் பெறல் அல்லது புதுப்பித்து வழங்கல் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளதுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரனையுடன் நடமாடும் பல் மருத்துவ சேவையும் நடமாடும் பொது மருத்துவ சேவையும் வழங்கப்படவுள்ளது.

(160)

# எரிபொருள் நிலையத்தில் நிறுத்தப்படும் வாகனங்கள்

## நுகர்வோர் நெருக்கடியில்

மானிப்பாய் ப.நோ.கூ சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் நிற்கும் பாரிய ஆலமரத்தின் கீழ் லான்ட்மாஸ்டர், முச்சக்கரவண்டி, மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் எரிபொருள் நிரப்ப வரும் ஏனைய வாகனங்கள் உள்ளே செல்லவும் வெளியே வரவும் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றன.

இப்பகுதி வர்த்தக நிலையங்கள் முன்பாக வாகனங்கள் நிறுத்துவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. என்ற அறிவிப்புப் பலகைகள் பல நாட்டப்பட்டுள்ளதால் இவ் ஆலமர நிழலில் வாடகைக்கு செல்லும் வாகனங்களை உரிமையாளர்கள் நிறுத்தி வைக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று பாவனையாளர்கள் பலரும் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (104)

# வவுனியா கல்வியியல் கல்லூரியின் 19 ஆவது ஆண்டு விழா

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் 19 ஆவது ஆண்டு விழா நாளை கல்லூரியின் பொதுநோக்கு மண்டபத்தில் பீடாதிபதி கே.பேணாட் தலைமையில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பீடாதிபதி கலாநிதி ஜே. கலாமணியும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி ஏ. லதாங்கியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(160)


# கூட்டமைப்பின் இந்தியச் சுற்றுலா தமிழர் தரப்பிற்கு சாதகமாக அமையுமா?

**- வே. அர்ச்சுணன்**

**கூட்டமைப்பின் இந்தியச் சுற்றுலா அவர்களது மற்றுமொரு வெளிநாட்டுச் சுற்றுலாவே தவிர தமிழர் தரப்பிற்கு சாதகமான சூழலை ஒரு போதுமே தோற்றுவிக்காது அவ்வாறு தோன்றுவதற்குக் கூட்டமைப்பினரும் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டார்கள்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தடல்புடலான பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியாவிற்குச் சென்று இந்தியப் பிரதமர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் மற்றும் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இச்சந்திப்பு பயனுள்ளதாக அமைந்ததாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளதுடன் இலங்கைமீது இந்தியத் தரப்பு விசனமுடன் காணப்பட்டதாகவும் கூட்டமைப்பினர் ஊடகங்கள் வாயிலாக அறிக்கைகளை வெளியிட்டுமுள்ளனர்.

கூட்டமைப்பிற்குத் தலைமைதாங்கிச் சென்ற சம்பந்தன் அவர்கள் இந்தியப் பிரதமரிடம் விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு நீங்கள் உதவியதால்தான் நாங்கள் உங்களுடன் சுதந்திரமாக பேச முடிவதாகவும் இதற்கு இந்தியாவிற்கே நன்றிசொல்ல வேண்டுமென மனதார எண்ணியவாறே பேச்சில் ஈடுபட்டிருப்பார். ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் அழிக்கப்பட வேண்டுமென்பதில் சம்பந்தன் எப்போதுமே உறுதியாகவே இருந்துள்ளார் என்பது ஒன்றும் இரகசிய விஷயமல்ல.




இந்திய - இலங்கை - கூட்டமைப்பு கூட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலேயே முள்ளிவாய்க்கால் அவலங்கள் நிகழ்ந்தேறியது. முள்ளிவாய்க்காலின் அவலங்கள் இடம்பெற்றபோது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சம்பந்தனிடம் சென்று நாங்கள் நாடாளுமன்றத்திலிருந்து விலகுவதாக பகிரங்கமாக ஒன்றாக அறிவிப்போம் எனக் கேட்டபோது சம்பந்தன் சிரித்தவாறு இன்னும் சிலநாட்களுக்குப் பொறுங்கள் எல்லாம் முடிந்துவிடும் என்று கூறிய கூற்று இராஜதந்திர ரீதியாக சம்பந்தன் புலிகள் அழியப்போவதை முன்கூட்டியே வெளிப்படுத்திய கூற்றாகும். தற்போது விடுதலைப் புலிகள் இல்லாத சூழ்நிலையில் தானே தமிழ் மக்களின் தனித்துவமான தலைவன் என சம்பந்தன் மார்தட்டுவது வேறுவிடயம்.

**முள்ளிவாய்க்காலின் அவலங்கள் இடம்பெற்றபோது கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சம்பந்தனிடம் சென்று நாங்கள் நாடாளுமன்றத்திலிருந்து விலகுவதாக பகிரங்கமாக ஒன்றாக அறிவிப்போம் எனக் கேட்டபோது சம்பந்தன் சிரித்தவாறு இன்னும் சிலநாட்களுக்குப் பொறுங்கள் எல்லாம் முடிந்துவிடும் என்று கூறிய கூற்று இராஜதந்திர ரீதியாக சம்பந்தன் புலிகள் அழியப்போவதை முன்கூட்டியே வெளிப்படுத்திய கூற்றாகும்.**

உண்மையில் இந்தியத் தரப்பிற்கும் கூட்டமைப்பிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுத் தொடர்பான உண்மையான நிலவரம் எதுவும் ஒரு கூட்டறிக்கையாக இதுவரை வெளிவராத சூழ்நிலையில் கூட்டமைப்பினர் தங்களுக்கு ஏற்ற விதத்தில் அறிக்கையினை வெளியிட்டு வருகின்றனர். உண்மையில் பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பு வெற்றி அளித்ததா? சந்திப்பால் பிரதமர் மன்மோகன் சிங் மனம்மாறி, தமிழ் மக்களுக்கு உதவ நினைத்தாரா? இச் சந்திப்பின்போது வழமைபோல் வலி.வடக்கில் மீள்குடியமர்வு, கடற்றொழிலில் இன்னமும் பின்னடைவு என்பன பற்றித்தான் பேசப்பட்டனவா? அல்லது மகிந்த அரசு இந்தியாவுக்குப் பயப்படுவதாகத் தெரியவில்லை. சீனாவைத் தன் நட்புறவாக்கிக் கொண்டு உங்களையும் எதிர்க்கத் திட்டமிட்டுள்ளது. நீங்கள்தான் எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டதா? என்பது குறித்து எதுவும் நமக்குத் தெரியாது. சந்தித்தவர்கள்தான் அது பற்றிக் கூறவேண்டும்.

எதுவாயினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்று என்று ஊடகங்கள் பெரியளவில் அறிக்கைகள் விடுகின்ற போதும் அந்தச் சந்திப்பைத் தக்க முறையில் பயன்படுத்தியிருக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடையது. அதனை அவர்கள் செய்தார்களா? அல்லது சம்பந்தன் ஐயா தன்னிடம் இருக்கக்கூடிய ஆங்கிலப் புலமையை, ஒன்றுக்கு மேற்பட்ட டாக்டர் பட்டம் (கலாநிதி) பெற்றுக்கொண்ட மன்மோகன் சிங்கிற்கு காட்ட நினைத்தாரா? என்பதை அவருடன் சென்றவர்கள்தான் எடுத்துரைக்க வேண்டும்.

இருந்தபோதிலும் இலங்கையிலிருந்து செல்லும் பொழுது பல்வேறு இழுபறிகள் மத்தியில் நான் போவதா? நீ போவதா? என்று தங்களுக்குள் மோதிக்கொண்ட பின்னரே கூட்டமைப்பினர் ஒவ்வொரு கட்சிகளிலுமிருந்தும் ஒருவர் செல்வதெனத் தீர்மானித்துச் சென்றிருந்தனர். இதில் ஆனந்த சங்கரி, சித்தார்த்தன் ஆகியோரை தட்டிக்கழித்துவிட்டே இவர்கள் இந்தியா சென்றிருந்தனர். ஆனந்த சங்கரி வந்திருந்தால் இந்திய இராஜதந்திரிகள் அவருக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்ற பயத்தில் சம்பந்தன் அவரைத் தட்டிக் கழித்துவிட்டுச் சென்றிருக்கக்கூடும் எனினும் உடனடியாகவே ஆனந்தசங்கரி ஆவேசமாக அறிக்கை வெளியிட்டமை தமிழ் மக்கள் கூட்டமைப்புக்குள் நடக்கின்ற குத்துவெட்டுகளை அறியக் கிடைத்த மேலும் ஒரு சிறு சந்தர்ப்பமாகும்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட ஏனைய தலைவர்கள் சம்பந்தனுடன் கூடிக்குலாவி நீங்கள்தான் ஏகத்தலைவன் என வாழ்த்திவிட்டே வந்துள்ளார்கள். ஆனால் இனப்பிரச்சினை தொடர்பில் இவர்கள் காத்திரமான பேச்சுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது சுரேஷ் பிரேமச்சந்திரனின் அறிக்கைகள் மூலம் விளங்கிக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. "இலங்கை அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டே போகிறது என்று இந்தியாவும் கருதும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த கட்டமாக, அகிம்சைப் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை, அப்போது தமிழகத்திலும் அதன் தாக்கம் எதிரொலிக்கும்" என்று இந்திய அரசிடம் தாங்கள் எடுத்துரைத்ததாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

சீனாவின் ஆதிக்கம், குறிப்பாக வடமாகாணத்தில் இராணுவ முகாம்களை நவீனமயப்படுத்துவதிலும் இராணுவக் குடியிருப்புக்கள் கட்ட நிதியுதவி அளிப்பதிலும் சீனா அதிக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. அது இலங்கைத் தமிழ் மக்களால் ஏற்க முடியாது. அது அவர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதால், இது தொடர்பில் இந்தியா ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியதாக அவர் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நிலவும் முரண்பாடுகள் குறித்து கவலை வெளியிட்ட இந்தியப் பிரதமர், கூட்டமைப்பு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என வலியுறுத்தியதாகவும், மிக விரைவில் அது தொடர்பான சரியான முடிவு எடுக்கப்படும் என்று பிரதமரிடம் சம்பந்தன் உறுதியளித்ததாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக ஒரு சரியான அமைப்பை முன்னெடுத்துச் செல்ல ஒரு வலுவான கட்சி தேவை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அப்படிப்பட்ட வலுவான கட்சியாக மாற்ற சம்பந்தர் அவர்கள் நிச்சயம் பணியாற்றுவார் என்று நம்புவதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்திருந்தார். இவ்வாறு சுரேஷ் தமது உட்கட்சிப் பூசல்களை இந்தியாவில் இருந்தவாறே வெளிப்படுத்தியுள்ளதுடன் தங்களுக்குள் உள்ள உட்கட்சிப் பூசல்கள் இன்னும் முடிவுறவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

ஒட்டுமொத்தத்தில் கூட்டமைப்பின் இந்தியச் சுற்றுலா அவர்களது மற்றுமொரு வெளிநாட்டுச் சுற்றுலாவாகவே இருக்குமே தவிர தமிழர் தரப்பிற்கு சாதகமான சூழலை ஒருபோதுமே தோற்றுவிக்காது அவ்வாறு தோன்றுவதற்குக் கூட்டமைப்பினரும் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டார்கள்.

# அரசாங்கத்தின் கடன் எல்லை; 6000 கோடி ரூபா அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் கடன் எல்லையை இந்த ஆண்டு ஆறாயிரம் கோடி ரூபாவினால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முப்படை, இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கடனுக்காக ஆறாயிரம் கோடி ரூபாவுக்கு திறைசேரி கடன்பத்திரங்களை விநியோகிப்பதே அரசின் கடன் எல்லையை அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது.

இந்நிலையில், பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு முப்படையினர் வழங்க வேண்டிய கடனுக்காக 950 கோடி ரூபாவுக்கும் இலங்கை மின்சார சபையினால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துககு வழங்க வேண்டிய கடனுக்காக 5,050 கோடி ரூபாவுக்கும் திறைசேரியின் கடன் பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

அந்தவகையில், இவ்வாண்டின் அரசாங்கத்தின் கடன் எல்லை 1,13, 900 கோடி ரூபாவிலிருந்து 1,19,900 கோடி ரூபாவாக 6 ஆயிரம கோடி ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சமனாக அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் 2,19,400 கோடி ரூபாவிலிருந்து 2,25,400 கோடி ரூபாவாக 6 ஆயிரம கோடி ரூபாவினால் அதிகரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பிலுள்ள இரண்டு பிரபல பாடசாலைகளின் மாணவர் குழுக்களிடையே நேற்றுமுன்தினம் நண்பகல் மோதல் ஏற்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில ஏற்பட்ட இந்த மோதலை பொலிஸார் தலையிட்டு நிறுத்தியதுடன், மாணவர்கள் மோதலுக்கு பயன்படுத்திய பொருட்களையும் பறிமுதல் செய்தனர்.

## மாகாணசபை முறைமை நீக்கப்படல் வேண்டும்

(கொழும்பு)

மாகாண சபை முறைமை, பிரிவினை வாதத்தை உருவாக்குகிறது. மாகாணசபை முறைமையை நீக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அதன் ஊடகப் பேச்சாளர் நிசாந்தசிறி வர்ணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை முறையும், 13 ஆம் அரசியல் திருத்தமும் நாட்டை பிரிவினைவாதத்துக்கு இட்டுச் செல்கிறது.

முன்பு அரசியல் தலைவர்களே பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி வந்தனர். எனினும் தற்போது நாட்டின் அரசியல் அமைப்பே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகிறது.

இந்த நிலையில் மாகாண சபை முறைமை நீக்கப்பட வேண்டும் என்றே ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## "நான் பிறகு பார்த்துக்கொள்கிறேன்" அதிகாரிகளை எச்சரித்த பிரதியமைச்சர்

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலைக்கு இரவு நேரத்தில் கைதி ஒருவரை பார்வையிடச் சென்ற பிரதி அமைச்சரை, சிறைச்சாலை அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

துறைமுக பிரதி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தனவே இவ்வாறு இரவு நேரத்தில் களுத்துறை சிறைச்சாலைக்குள் பிரவேசித்துள்ளார்.

தமது ஆதரவாளர்களுடன் இரவு நேரத்தில் கைதி ஒருவரை பிரதி அமைச்சர் பார்வையிட முயற்சித்துள்ளார்.

இரவு நேரத்தில் கைதிகளை பார்வையிட முடியாது என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த பிரதி அமைச்சர் " நான் பிறகு பார்த்துக் கொள்கின்றேன் " என சிறைச்சாலை அதிகாரிகளை எச்சரித்துள்ளார்.

கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள மேல் மாகாண சபை உறுப்பினர் நிமால் சந்திரசேனவை பார்வையிடுவதற்கே பிரதி அமைச்சரும், அவரது 15 ஆதரவாளர்களும் இவ்வாறு இரவு நேரத்தில் களுத்துறைச் சிறைக்கு சென்றுள்ளனர்.

## உச்சிமுனைத்தீவில் 450 ஏக்கரில் நட்சத்திர விடுதி

(கொழும்பு)

கற்பிட்டி உல்லாசப் பயணத் துறை வலயத்துக்குட்பட்ட உச்சி முனைத் தீவின் சுமார் 450 ஏக்கர் நிலப்பரப்பில் நட்சத்திர ஹோடடலொன்றை அமைக்க நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், குறித்த நிலப் பரப்பினை 107 கோடி ரூபாவுக்கு 99 வருட குத்தகைக்கு விட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட செபயர் பே ரிசோர்ட் (தனியார்) நிறுவனத்தினால் மேற்படி ஹோட்டல் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த ஹோட்டல் நிர்மாணத்துக்காக மேற்படி நிறுவனத்தினால் 16 கோடி அமெரிக்க டொலர்களை செலவிட அந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ, சுமார் 810 உல்லாசப் பயண அறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அந்தவகையில் 150 அறைகள் கொண்ட ஸ்பா ஹோட்டலொன்றும், அதிசொகுசு வாய்ந்த அறைகள் 150 அடங்கிய 5 நடசத்திர ஹோடடலொன்றும், 150 அறைகள் கொண்ட களப்பு பிரதேச வலா ஹோட்டலொன்றும், கொல்ப் விளையாட்டு மைதானமொன்றும் இந்த ஹோட்டல் நிர்மானத்துக்குள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.



## உ/த விடைத்தாள்கள் மதிப்பீடு; முதலாம் கட்டப் பணி இன்று நிறைவு

(கொழும்பு)

க.பொ.த உ/த விடைத்தாள்கள் மதிப்பிடும் பணிகளில் முதலாம்கட்ட பணிகள் இன்று நிறைவடையும். இந்த மதிப்பீட்டு பணிகளில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் என 6,800 பேர் ஈடுபட்டுள்ளனர் என பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு. எம்.என்.ஏ. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டாம் கட்ட பணிகள் நாளையிலிருந்து 23 ஆம் திகதிவரை நடைபெறும். இந்த மதிப்பீட்டு பணிகளுக்காக 8785 விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்பர். மூன்றாம் கட்டப் பணிகள் 24 ஆம் திகதியிலிருந்து நவம்பர் 6 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதுடன் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 13 பாடசாலைகள் மூடப்படும். அத்துடன் விடைத்தாள்கள் மதிப்பீட்டு பணிகளுக்காக மேலும் 17 பாடசாலைகள் தற்காலிகமாக மூடபட்டுள்ளன.

இதேவேளை, இறுதிக்கட்ட மதிப்பீட்டு பணிகளில் 800 பேர் ஈடுபடவுள்ளதுடன் சகல பணிகளும் நவம்பர் 21 ஆம் திகதியுடன் நிறைவுக்கு கொண்டு வர எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வன்னிப் போர்த் தகவல்களைத் திரட்ட கெயார் 300 பேரை வேலைக்கமர்த்தியது

### திவயின தகவல்

(கொழும்பு)

வன்னிப் போர் தொடர்பில் உளவுத் தகவல்களைத் திரட்ட கெயார் (care) என்ற அரச சார்பற்ற நிறுவனம் 300 பேரை கடமையில் ஈடுபடுத்தியிருந்ததாக திவயின பத்திரிகை செயதி வெளியிட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத்தின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உளவுத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டவர்களில் 95 வீதமானவர்கள் இலங்கையர்களாகும்.

வன்னிப் போரின் போது குறித்த அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு செய்மதித் தொலைபேசிகள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு இரகசியத் தகவல்களைத் திரட்டிய ஒரு நோர்வே அதிகாரியை அரசாங்கம் நாடு கடத்தியிருந்தது என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

## பொருட்கள் சேவைகளுக்கான விலையை உயர்த்த அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே பொருட்கள் சேவைகளுக்கான விலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிமெந்து, சிகரட், கோழி இறைச்சி, மதுபானம் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகளை அரசாங்கம் ஏற்கனவே உயர்த்தியுள்ளது.

எதிர்வரும் ஓரிரு நாட்களில் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளும் உயர்த்தப்படும்.

மேலும் மேலும் மக்களை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு பொருட்கள் சேவைகளுக்கான விலையை உயர்த்தி வருகின்றது. அரசாஙகம் 6500 மில்லியன் ரூபா கடன் பட்டுள்ளதாகவும், இதற்காக வருடாந்தம் 65609 கோடி ரூபா வட்டியாக அரசாங்கம் செலுத்தி வருவதாகவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கடனைச் செலுத்துவதற்காக மக்கள் மீது மேலும் வரிச் சுமை திணிக்கப்படும் என்றார்.

## பாடசாலை மாணவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம்

பாடசாலை மாணவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை மாணவ, மாணவியரில் 89 வீதமானவர்கள் உடற் பயிற்சி எதனையும் மேற்கொள்வதில்லை என தெரிவித்துள்ளது.

5 வயது முதல் 19 வயது வரையிலான மாணவ, மாணவியர் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமேனும் உடற் பயிற்சி செய்ய வேண்டும்.

பாடசாலை மாணவர்களில் 17 வீதமானவர்களும், மாணவர்களில் 30 வீதமானவர்களும் உடல் எடை கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். பாடசாலை மாணவ மாணவியரின் 10, 15 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில தசாப்தங்களுக்கு முன்னதாக நீரிழிவு, மாரடைப்பு போன்ற தொற்றாத நோய்கள் பெரியவர்களுக்கு மட்டுமே ஏற்பட்டதாகவும், தற்போது மாணவ, மாணவியருக்கு இந்த நோய்கள் ஏற்படுவதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## ஒல்லாந்தர் காலத்து பொருட்கள் மீட்பு



(கொழும்பு)

சீதாவாக்கை ராஜதானிக்குரிய அவிசாவளையில் பல புராதன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவிசாவளை - மாரியங்கம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது இவை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவை ஒல்லாந்தர் இலங்கையில் இருந்த காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒல்லாந்தர்கள் பயன்படுத்திய நாணயங்கள், பாத்திரங்கள் போன்றன இவ்வாறு மீட்கக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், சீத்தாவாக்கை ராஜதானிக்கு சொந்தமான மேலும் பல விபரங்கள் வெளிக்கொணரப்படும் என்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

# மக்களுடன் இணைந்த செயற்பாடே உயர் நிலைக்கு காரணமாகிறது

## – காரைநகர் அஞ்சல் அதிபர் –



(காரைநகர்)

காரைநகர் தபால் அலுவலகம் உயர்வு நிலையை எட்டியுள்ளமை பாராட்டத்தக்கதும், மகிழ்ச்சியானதுமாக இருக்கிறது. அந்த வகையில் காரைநகர் தபாலகம் மக்களுடன் இணைந்து மேலும் உயர்வு நிலையை அடைய வேண்டும் என காரைநகர் அஞ்சல் அலுவலக அதிபர் நா.ஜீவானந்தன் தெரிவித்தார்.

காரைநகர் அஞ்சல் அலுவலகத்தினால் காரைநகர் கோட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 17 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது அஞ்சல் அலுவலகம் உயர்வு நிலை கண்டதுடன், பாடசாலையில் 2012 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிப்பதிலும் முன்னிலை வகிக்கின்றோம். இதே போல அவர்களின் சிறுவயதில் சேமிப்பினை ஊக்குவிப்பதற்காக 'சிமையில்' சேமிப்பு, 'வின்வின்' சேமிப்பு முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். இம்மாணவர்கள் கல்வியில் பல உயர்ச்சிகளைக் காணவேண்டும். அதே போல் எமது தபால் அலுவலகமும் மக்களுடன் இணைந்து மேலும் உயர்வு காணப்பிரார்த்திக்கின்றேன் என்றார். இந்நிகழ்வில் கோட்டக்கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர்கள், தபால் ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (50)

# யாழில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாண குடாநாட்டில் மாணவர்களினது வாசிப்புத் திறன் மற்றும் அறிவுத்திறன் தேடல் ஆகியவற்றை மேலும் மேம்பாடடையச் செய்வதற்காக எம்.டி.குணசேன புத்தக நிலையத்தினால் யாழ்ப்பாணத்தில் மாபெரும் புத்தகக் கண்காட்சி நடாத்தப்படவுள்ளது.

இப் புத்தகக் கண்காட்சியானது மேற்படி புத்தக நிலையத்தினால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் 29 ஆம் திகதி வரை தினமும் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை நடைபெறவுள்ளது. இதன் போது விற்பனை செய்யப்படும் புத்தகங்களுக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுவதுடன் 1500 ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட புத்தகங்களை கொள்வனவு செய்வோருக்கு லம்டொப், டப்லட், இலத்திரனியல் டிக்ஷனரி ஆகியவற்றை வெல்லக்கூடிய கூப்பன்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக குடாநாட்டு அனைத்து பாடசாலைகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (03)

# மாணவர்களுக்கான சித்திரப்போட்டி

ஐக்கிய நாடுகள் சுற்றுலா செயற்றிட்டம், ஜப்பான் கோளமய சமாதான மற்றும் சூழலுக்கான பெடரேசன், பேயர் மற்றும் நிக்கொன் கம்பனியின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்படும் 22 ஆவது சர்வதேச மற்றும் சுற்றாடல் சிறுவர் சித்திரப் போட்டிகளுக்கு ஆக்கங்களை சமர்ப்பிக்க இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபையினால் பாடசாலை மாணவர்களிடமிருந்து ஆக்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுளளது.

இப்போட்டிக்காக 'வாழ்க்கையின் மூலம் நீர்' என்னும் கருப்பொருளில் 6 முதல் 14 வயதிற்கிடைப்பட்ட மாணவர்ளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுளளன. ஆக்கங்கள் ஏ3 அளவு சித்திரக்கடதாசியில் அல்லது போட்டோப் பிரதி கடதாசியில் தயாரிக்கப்பட்ட கிரயோன் வர்ணம் அல்லது நீர் வர்ணத்தை கொண்டு ஆக்கப்பட்ட சுய ஆக்கமாகவும், இதற்கு முன்னர் எந்தவொரு இடத்திலும் வெளியிடப்படாததுமாகவும், யாரேனும் நபர் அல்லது அமைப்பின் பெயர் சித்தரித்துக் காட்டாததாகவும் இருத்தல் வேண்டும்.

இதில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெறும் போட்டியாளர்களுக்கு தமது பாதுகாவலர்களுடன் டெஸ்ஸா சர்வதேச சிறுவர் மாநாட்டில் பங்குபற்றும் வாய்ப்பும், நினைவுச் சின்னங்களும் வழங்கப்படவுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக தலா முறையே முதலாம் வெற்றியாளருக்கு 2000 அமெரிக்க டொலர்களும், இரண்டாம் வெற்றியாளருக்கு 1000 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படவுள்ளதுடன் சகல வலய மட்டங்களிலும் ஒரு வெற்றியாளருக்கு தமது பாதுகாவலர்களுடன் டெஸ்ஸா சர்வதேச சிறுவர் மாநாட்டில் பங்குபற்றும் வாய்ப்பும், நினைவுச் சின்னங்களும் வழங்கப்படவுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக 1000 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படவுள்ளது

மேலும் ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் நாயகம், இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழச் சபை, கல்வி அமைச்சு, 5 வது மாடி, இசுறுபாய், பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு நேரில் அல்லது தபாலில் அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுளளது. (03)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 18.10.2012

- கூட்டமைப்பு வாக்குகளுக்காக கூறிய பொய் இந்திய விஜயத்தில் அம்பலமாகியது
- மட்டக்களப்பின் மினி சூறாவளிகளும் அதன் இழப்புக்களும்
- தெங்கு அபிவிருத்தியில் தாக்கம் செலுத்தும் 'மைக்கா'
- ஏனென்ற கேள்வி?






உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு – சுவை – சுவாரசியம் இதுதான் தினமுரசு


# மன்னிப்புக் கோரிய ரசாக்

(லாகூர்)

பாகிஸ்தான் அணிக் கப்டன் ஹபீஸ் குறித்து தெரிவித்த கருத்துக்கு கிரிக்கெட் சபையிடம் அப்துல் ரசால் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்துல் ரசாக், சமீபத்தில் நடந்த ருவென்ரி-20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இவர் ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டுமே இடம் பெற்றார். அரை இறுதி ஆட்டத்தில் அவர் சேர்க்கப்படவில்லை.

இதனால் ரசாக் அதிருப்தி அடைந்தார். தனது நீக்கத்துக்கு கப்டன் முகமது ஹபீஸ்தான் காரணம் என்று கூறி அவரை அப்துல் ரசாக் விமர்சித்து இருந்தார். இதற்கு கிரிக்கெட் சபை அப்துல் ரசாக்குக்கு கடிதம் அனுப்பியது. இந்த கடிதம் தொடர்பாக அவர் தனது சட்டத் தரணியுடன் ஆலோசனை செய்தார். இந்தக் கடிதத்திற்கு அப்துல் ரசாக் பதில் அனுப்பி உள்ளார். அதில் தனது செயலுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் அவர் மன்னிப்பு கேட்டுள்ளார். எதிர்காலத்தில் இதுமாதிரி நடைபெறாமல் இருக்க கவனமுடன் செயற்படுவேன். ஹபீஸுடன் தனக்கு தனிப்பட்ட முறையில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தனது பதிலில் தெரிவித்துள்ளார்.



# உஷ்... எனக்குப் புற்றுநோய்

(ஓக்லாந்து)

நியூசிலாந்து அணியின் முன்னாள் கப்டன் மார்டின் குரோவ் புற்றுநோயால் அவதிப்படுகிறார்.

நியூசிலாந்து டெஸ்ட் அணியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில், ஸ்டீபன் பிளமிங்கிற்கு (111 டெஸ்ட், 7,172 ஓட்டங்கள்) அடுத்து, இரண்டாவது இடத்தில் (77 டெஸ்ட், 5,444 ஓட்டங்கள்) உள்ளவர் மார்டின் குரோவ் (வயது-50). தவிர, 143 ஒருநாள் போட்டிகளில் 4,704 ஓட்டங்கள் எடுத்த இவர், அணியின் கப்டனாகவும் இருந்தார்.

ஓய்வுக்குப் பின், பயிற்சியாளர் மற்றும் வர்ணனையாளராக இருந்துவந்தார். இதனிடையே, இவருக்கு நிணநீர் சுரப்பியில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து குரோவின் முகாமையாளர் ஹெண்டர்சன் கூறுகையில், குரோவிற்கு ஏற்பட்ட புற்றுநோய் முற்றிலும் புதிது. இரத்தத்தில் கிருமி பாதிப்பு ஏற்பட்டிருப்பதால், உடலின் எதிர்ப்புச் சக்தி குறையும். இதனால் அவரது குடும்பம் இன்னும் அதிர்ச்சியில் உள்ளது என்றார்.

# டென்மார்க் ஓப்பன் சாய்னா பங்கேற்பு

(ஒடென்ஸ்)

இந்திய பட்மின்ரன் வீராங்கனை சாய்னா, இரண்டு மாத இடைவெளிக்கு பின் டென்மார்க் ஓப்பன் தொடரில் பங்கேற்கவுள்ளார். டென்மார்க்கில் உள்ள ஒடென்ஸ் நகரில் நேற்று முதல் டென்மார்க் ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. இதில் இரண்டு மாதமாக ஓய்வில் இருந்த உலகின் நான்காம் நிலை வீராங்கனையான சாய்னா, லண்டன் ஒலிம்பிக்கிற்குப் பின்னர் இத்தொடரில் பங்கேற்கிறார். இவர் முதல் சுற்று போட்டியில் கொரியாவின் இயான் ஜூ போவை சந்திக்கிறார். இது குறித்து சாய்னா கூறுகையில், கடந்த ஐந்துவாரமாக கடுமையான பயிற்சி மேற்கொண்டேன். தற்போது சிறப்பாக உணர்கிறேன். கண்டிப்பாக இந்த தொடரில் சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# தனியான ருவென்ரி-20 அணி இலங்கை ஆலோசனை

(கொழும்பு)

ருவென்ரி 20 கிரிக்கெட் அணியை இலங்கை தனியாக தோற்றுவிக்க கூடும் என அவ்வணியின் பிரதம தெரிவாளர் அசந்த டி மெல் கூறினார்.

நியூசிலாந்துடன் ஒக்டோபர் 30 இல் விளையாடவுள்ள போட்டியில் இந்தப் புதிய அணி அறிமுகமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் தலைவராக உதவி கப்டன் மத்தியூஸ் நியமனம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இறுதி ருவென்ரி-20 போட்டியில் இலங்கை அணியினால் ஒரேயொரு சிக்ஸ் மட்டுமே அடிக்க முடிந்தது. சரியாக இலக்கு வைத்து பந்தை அடிக்க கூடிய இளம் இளைஞர்களை நாம் தேடிப்பிடிப்போம் என அசந்த டி மெல் கூறினார்.

மஹேல ஜெயவர்த்தன, மத்தியூஸ் ஆகியோரால் எல்லைக்கு அப்பால் பந்தை அனுப்புமளவுக்கு பலம் இல்லை.

எமது துடுப்பாடலுக்கு என்ன நடந்தது என எனக்குத் தெரியவில்லை. முன்னர் முதல் ஆறு ஓவர்களில் குறைந்தது 50 ஓட்டங்களை எடுத்துவந்தோம். இறுதி போட்டியில் எமது அணி 30 ஓட்டங்களையே பெற்றது. இதனால் எதிரணியின் கையோங்கியது என அவர் மேலும் கூறினார்.



# சச்சின் விக்கெட்டை வீழ்த்தியால் தூங்காமல் மகிழ்ந்தேன்

(ஜோகனஸ்பர்க்)

உலகின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கரின் விக்கெட்டை கைப்பற்றிய மகிழ்ச்சியை, இரவெல்லாம் தூங்காமல் கொண்டாடினேன் என ஆரோண் பங்கிசோ தெரிவித்தார்.

லயன்ஸ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடரின் லீக் போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில்தோல்வியடைந்தது. இதில் பெரிதும்எதிர்பார்க்கப்பட்ட மும்பை வீரர் சச்சின், பங்கிசோ பந்தில் போல்டானார்.

இதுகுறித்து பங்கிசோ கூறுகையில், சச்சின் விக்கெட்டைக்கைப் பற்றியது மகிழ்ச்சியான ஒன்று. இதை நினைத்து எனக்கு தூக்கம் வரவில்லை. இரவெல்லாம் கொண்டாடினேன். சிறப்பான முறையில் பயிற்சியில் ஈடுபட்டதால் சாதிக்க முடிந்தது. தொடர்ந்தும் சிறப்பான பந்துவீச்சு பெறுபேற்றை வெளிப்படுத்துவேன் என்றார்.

# சச்சினுக்கு ஆஸியின் உயர் விருது

(புதுடில்லி)



தற்போதைய கிரிக்கெட் உலகின் சகாப்தம் என்று அழைக்கப்படும் சச்சினுக்கு அவுஸ்ரேலியாவின் உயரிய விருது வழங்கப்படவுள்ளது.

இந்தியா வந்துள்ள அவுஸ்ரேலிய பிரதமர் ஜூலியா கிலார்ட் கூறும்போது,

இந்திய கிரிக்கெட் வீரர் டெண்டுல்கருக்கு ஓர்டர் ஓப் அவுஸ்ரேலியா என்ற உயரிய விருது வழங்கப்படும் என்றார். அவுஸ்ரேலியா அல்லாத ஒருவர் இந்த விருதை பெறுவது அபூர்வ மானது. இந்த விருதை பெறும் 2ஆவது இந்தியர் டெண்டுல்கர் ஆவார்.

இதற்கு முன்பு முன்னாள் அட்டர்னி ஜெனரல் சோலிப் சொரப்ஜி இந்த விருதை பெற்றார். அவுஸ்ரேலிய அமைச்சர் சைமன் இந்தியா வரும்போது டெண்டுல்கருக்கு இந்த விருது வழங்கப்படும். இந்த விருதை பெறும் 3ஆவது கிரிக்கெட் வீரர் டெண்டுல்கர் ஆவார். இதற்கு முன்பு 1985ஆம் ஆண்டு கிளைவ் லொயிட்டும், 2009ஆம் ஆண்டு பிரைன் லாராவும் (மேற்கிந்தியத்தீவு) இந்த விருதை பெற்றனர்.



# இந்தியா தொடரில் வேண்டும் கெவின்

இந்தியாவிற்கான கிரிக்கெட் தொடரின் போது இங்கிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் இடம்பெற்றால் மிகச்சிறப்பாக இருக்கும். அந்த வாய்ப்பை இங்கிலாந்து கிரிக்கெட் ஏற்படுத்த வேண்டும் என அவ்வணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி இம்மாதம் 30ஆம் திகதி முதல் பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதோடு, முதலாவது டெஸ்ட் போட்டியில் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் பங்குபற்றவுள்ளது. இத்தொடருக்கான டெஸ்ட் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வணியில் கெவின் பீற்றர்சன் இடம்பெற்றிருக்கவில்லை. இங்கிலாந்து வீரர்கள் சிலருக்கும், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபைக்கும், கெவின் பீற்றர்சனுக்குமிடையிலான முரண்பாடு காணப்பட்ட நிலையிலேயே கெவின் பீற்றர்சன் அத்தொடரில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது இரு தரப்பினரிடையே இணக்கப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியத் தொடரில் கெவின் பீற்றர்சன் இடம்பெற்றால் மிகச்சிறப்பானதாக அமையும் எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், இப்பிரச்சினைகளை ஓரங்கட்டி விட்டு இந்தியாவில் மிகச்சிறப்பாகப் போட்டிகளில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார். இங்கிலாந்து அணி தனது டெஸ்ட் முதலிடத்தை தென்னாபிரிக்காவிற்கெதிரான தொடரில் இழந்த நிலையில், இழந்த முதலிடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இங்கிலாந்தின் மிகச்சிறந்த வீரர்கள் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். இங்கிலாந்தின் மிகச்சிறந்த வீரர்களில் கெவின் பீற்றர்சனும் ஒருவர் எனத் தெரிவித்துள்ளார்.

# கொல்கத்தா அணி மீண்டும் தோல்வி



(கேப்டவுன்)

சம்பியன் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் கொல்காத்தா நைட் ரைடர்ஸ் அணி மீண்டும் தோல்வியடைந்துள்ளது.

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி- 20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு நடைபெற்ற லீக் போட்டியில் "ஏ" பிரிவில் இடம் பெற்றுள்ள கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - ஒக்லாந்து ஆசஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய கொல்காத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஆறு 137 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மக்கலகம் 40, பிஸ்லா 38, பதான் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அசார் மொகமட் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 138 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஒக்லாந்து ஆசஸ் அணி 17.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மெகமூத் 51, குப்ரில் 24, வின்செனட் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுனில் நரைன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகனாக அசார் மொகமட் தெரிவானார். கொல்காத்தா அணி ஏற்கனவே, டில்லி அணியுடன் தோல்வியடைந்துள்ள நிலை யில் மீண்டும் ஒக்லாந்து அணியுடன் தோல்வியுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட்சனை அழைக்கும் கிளார்க்

(சிட்னி)




தென்னாபிரிக்க அணியுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கு பயிற்சி பெறும் வகையில், சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடரில் இருந்து அதிரடி சகலதுறை வீரர் ஷேன் வட்சன் விலக வேண்டும் என்று அவுஸ்ரேலிய கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணி அடுத்த மாதம் அவுஸ்ரேலியா சென்று 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. முதல் டெஸ்ட் பிரிஸ்பேன் மைதானத்தில் நவம்பர் 9ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்த தொடரில் விளையாட உள்ள அவுஸ்ரேலிய வீரர்களுக்கான பயிற்சி முகாம் சிட்னியில் நேற்று முன்தினம் தொடங்கியது. ஷேன் வட்சன், கம்மின்ஸ், மைக்கல் ஹஸி, பென் ஹில்பென்ஹாஸ், மிட்செல் ஸ்டார்க், மிட்செல் ஜோன்சன், போலிஞ்சர் உட்பட பல அவுஸ்ரேலிய வீரர்கள் சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடரில் விளையாடி வருகிறார்கள். முக்கியமான டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள நிலையில், ருவென்ரி-20 போட்டிகளில் அதிகம் விளையாடினால் அது வீரர்களின் ஆட்டத் திறனைப் பாதிக்கும் என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை கருதுகிறது. இதனால், வட்சன் உட்பட அவுஸ்ரேலிய வீரர்கள் சிஎல் ருவென்ரி-20 தொடரில் இருந்து விலகி உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என டெஸ்ட் அணி கப்டன் மைக்கல் கிளார்க் கேட்டுக் கொண்டுள்ளார். சிஎல் ருவென்ரி20இல் இன்னும் 2 லீக் ஆட்டங்களில் மட்டுமே ஆஸி. வீரர்கள் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேசப் போட்டிக் கனவை நெருங்கியதாக உணர்கிறேன்

## தேசியத்தில் தங்கம் வென்ற இரத்தினசிங்கம் நிமலேந்திரா



(யாழ்ப்பாணம்)

சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி தாயகத்திற்கு வெற்றி தேடிக் கொடுக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் பதக்கம் வென்றதன் மூலம் அந்தக் கனவிற்கு அருகில் சென்றிருந்ததாகவே உணர்கின்றேன் என உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வீரர் இரத்தினசிங்கம் நிமலேந்திரா தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில், 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் பங்குபற்றி இரத்தினசிங்கம் நிமலேந்திரா, 12.98 மீற்றர் எறிந்து முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

இவரின் சாதனை குறித்து எமது செய்தியாளர் தயாளபாலன் கருத்துக் கேட்டபோது மேற்கண்டாவறு அவர் தெரிவித்தாார்.

சாதனை குறித்து நிமலேந்திரா மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் குண்டெறிதல் போட்டியில் பங்குகொண்டு இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டேன். அத்துடன் 15ஆவது ஆசிய மட்ட போட்டிக்கும் தெரிவானேன். பின்னர் இடம்பெற்ற கனிஷ்ட மட்ட மெய்வன்மைப் போட்டியிலும் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்டேன்.

மேலதிக தேவைகளுக்காக பயிற்சி உபகரணங்கள்ள வேண்டுவதற்கு எனது பெற்றோர் மற்றும் உறவினரான இராஜேஸ்வரன் ஆகியோர் உதவி புரிந்து பல வகையிலும் ஊக்கமளித்துக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் சாதிக்க வேண்டும் என்ற வெறி எனக்குள் ஏற்படும். பயிற்றுநர் விஜிதரனிடம் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். அவர்களோடு எனது பாடசாலையின் உடற்கல்விப் பொறுப்பாசிரியர் பாக்கியநாதன், என்னை விளையாட்டுக்குரிய வீரராக இனங்கண்டு எனக்கு ஊக்கமளித்தார்.

அத்துடன் உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வக்குமரன், எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் தர்மலிங்கம், இன்றைய அதிபர் கிருஷ்ணகுமார் ஆகியோர் பல வகையிலும் எனக்கு ஊக்கமளித்து வருகின்றனர். பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு உறுப்பினர்கள் எனது விளையாட்டுக்குரிய இடத்தை அமைத்துத் தந்துள்ளனர். இவர்களின் ஒட்டுமொத்த ஊக்கமளிப்பு, வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தமையே நான் தேசிய மட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பிடிக்க ஏதுவாக அமைந்தது. இவர்களுக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும், நலன் விரும்பிகள், நண்பர்கள் அனைவருக்கும் இந்த இடத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னைப் பொறுத்த வரையில், ஏனைய மாகாணங்களைவிட வடமாகாணத்திற்கான வசதி வாய்ப்பு குறைந்தளவிலேயே உள்ளது. வசதி வாய்ப்புக்களை உரிய முறையில் எமது மாகாண வீரர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் பட்சத்தில் முறையான பயிற்சிகளில் அவர்கள் முழு மனதுடன் ஈடுபட்டால் வெற்றி ஈட்டும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

உரியவர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், வர்த்தகப் பெருமக்கள், வீர, வீராங்கனைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் வடக்கு மாகாண வீரர்களும் மிகச் சிறந்த பெறுபேறுகளை எதிர்வரும் காலங்களில் ஈட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி, தாயகத்திற்கு வெற்றி தேடிக் கொடுக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் அந்தக் கனவின் அருகில் சென்றிருப்பதாகவே நான் உணர்கின்றேன். அதனை முழுமையாக்க இன்னும் கடின பயிற்சிகள், தொழில்நுட்ப வசதிகள் அவசியமானது. அவ்வாறான வசதி, வாய்ப்புகள் என்னைப் போன்ற வீர, வீராங்கனைகளுக்குச் செய்து கொடுக்கப்படும் பட்சத்தில் நாமும் சர்வதேச விளையாட்டுக்களில் மிளிர்வோம் எனவும் அவர் தெரிவித்தார். (93)

## காட்சிப் போட்டி சமநிலையில்

(முழங்காவில்)

முழங்காவில் விநாயகர் அணிக்கும், யாழ். பொற்பதி அணிக்கும் இடையில் நடைபெற்ற காட்சிப் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின்போது காட்சிப் போட்டி ஒன்றும் நடத்தப்பட்டது. இதில் யாழ். பொற்பதி அணியும், முழங்காவில் விநாயகர் அணியும் மோதின.

இதில், இரு அணிகளுமே சிறப்பான முறையில் ஆடியிருந்தன. இறுதியில் 2-2 என்ற கோல் கணக்கில் இருந்த நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதேவளை, விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்துப் போட்டியில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## கிண்ணம் வென்றது அச்சுவேலி வைரஸ்

(அச்சுவேலி)

தெய்வேந்திரம் ஜெகதம்பிகை மென்பந்து கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை அச்சுவேலி வைரஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

அச்சுவேலி பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் அச்சுவேலி. ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட தெய்வேந்திரம் ஜெகதம்பிகை மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

பிரதேசத்திற்குட்பட்ட பல முன்னணி அணிகள் இப்போட்டித் தொடரில் பங்குகொண்டபோதும் வைரஸ் அணி மற்றும் செங்கொடி அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.


இப்போட்டித் தொடர், அணிக்கு 11 பேர் கொண்ட 15 ஓவர் ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய வைரஸ் அணி மது, றஜீம் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இதில் வைரஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மது 20, றஜீம் 31, தயாளன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிசாந்தன், சாயந்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய செங்கொடி அணி றஜீமின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கஜந்தன் அணியின் நிலையை உணர்ந்து பொறுமையாகவும், அதேவேளை அதிரடியாகவும் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலையை அடைய வழிவகுத்தார். இறுதியில் செங்கொடி அணி 11 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது.

இதில் கஜந்தன் மிகவும் சிறப்பாக ஆடி அரைச்சதம் (51) அடித்தார். மற்றும் சாநய்தன் 33 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் றஜீம் நான்கு, தயாளன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக றஜீமும், தொடர் நாயகனாக கஜந்தனும் தெரிவானார்கள். (118)

## இங்கிலாந்து அணியின் எதிர்காலத் தலைவர்



இங்கிலாந்து அணியின் எதிர்காலத் தலைவராக மன்செஸ்டர் யுனைட்டட் அணியின் வெய்ன் றூனியைத் தான் கருதுவதாக இங்கிலாந்து தேசிய அணியின் முகாமையாளர் ரோய் ஹொட்ஜ்சன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் வழமையான தலைவர் ஸ்டீவன் கெரார்ட் போட்டித் தடை காரணமாகவும், உபதலைவர் ஃபிராங் லம்ப்பார்ட் காயம் காரணமாகவும் போட்டிகளில் பங்குபெற முடியாது போக வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சன் மரினோவிற்கு எதிரான உலகக்கிண்ணத் தகுதிப் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் தலைவராக வெய்ன் றூனி செயற்பட்டிருந்தார்.

அப்போட்டியில் இங்கிலாந்து அணி 5-0 என்ற கணக்கில் வெற்றியடைந்திருந்ததோடு, வெய்ன் றூனி 2 கோல்களையும் பெற்றிருந்தார்.

இந்நிலையில் இங்கிலாந்தின் எதிர்காலத் தலைவராக வெய்ன் றூனியைக் கருதுகிறீர்களா? எனக் கேட்கப்பட்டமைக்குப் பதிலளித்த ரோய் ஹொட்ஜ்சன், வெய்ன் றூனியை எதிர்காலத் தலைவராகக் கருதுவதாகவும், அவர் மிகவும் முதிர்ச்சியடைந்தபண்புகளை வெளிப்படுத்துவதாகவும் பாராட்டுத் தெரிவித்தார். இங்கிலாந்துக்காகப் போட்டிகளில் பங்குபற்றுவதை வெய்ன் றூனி நம்பமுடியாதளவு முக்கியமானதாகக் கருதுவதாகத் தெரிவித்த ரோய் ஹெற்ாட்ஜ்சன், அணித்தலைவராகச்செயற்படுவதை அவர் பெருமையானதாகக் கருதுவதாகவும், அணித்தலைவராகச் செயற்பட அவர் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

# பேஸ்புக் உங்களை விற்பது தெரியுமா?

- நன்றி: வினவு -




ஃபேஸ்புக் இன்றைய "நவீன இளைஞர்"களின் முகவரி. பல் துலக்காமல் கூட இருக்க முடியும், பேஸ்புக்கில் ஸ்டேட்டஸ் போடாமல் இருக்க முடியுமா என்ற பழமொழி இணையத்தில் பிரபலம். ஒபாமா அரசியல் முதல் உசிலம்பட்டி டீக்கடை வரை அனைத்தையும் பகிர்ந்து கொள்வதும், தனது படம், பெருமைகளை அப்டேட் செய்வதும் இவற்றுக்கெல்லாம் லைக் போடுவதும் பேஸ்புக்கில் அனிச்சை செயலாக மாறியிருக்கிறது.

ஒண்ணாம் கிளாஸ் முதல், கல்லூரி வரை கூடப் படித்தவர்கள், பழைய தெருக்காரர் முதல் புதிய தெருக்காரர் வரை, நேரில் சிரித்துக் கொள்கிறார்களோ இல்லையோ பேஸ்புக்கில் முகம் கொடுக்காமல் இருக்க முடியாது. நட்பின் இலக்கணத்திற்குள் பேஸ்புக் கணக்கு வைத்திருப்பது ஒரு நிபந்தனையாக மாறி வருகிறது.

எனினும் பேஸ்புக்கில் அனைத்து உணர்ச்சிகளும் ஒரு வணிக நோக்கத்திற்காகவே திரட்டப்படுகின்றன. ஒரு கவிதையையோ இல்லை படத்தையோ இல்லை ஒரு கார்ட்டூனையோ பேஸ்புக்கில் போட்டோ பகிர்ந்தோ புரட்சியாளர் ஆனவர்கள் ஆயிரம் பேர். இந்த மாய உலகம் உருவாக்கியிருக்கும் உணர்ச்சி, உண்மை உலகத்தோடு உள்ள உறவை மறைத்து வருகிறது. இப்படித்தால் புரட்சியையும், காதலையும் நடப்பையும் கூட உரமாக போட்டு சமூக வலைப் பின்னலை உருவாக்கியிருக்கிறது பேஸ்புக் நிறுவனம்.

இணையம் என்ற நிகர் நிலை உலகில் பேஸ்புக் ஒரு திருவிழாக் கூட்டம் என்றால் மிகை அல்ல. பொதுவாக மக்கள் கூடும் இடங்களில் தமது சரக்குகளை கடை பரப்புவதற்கு வியாபாரிகள் போட்டி போடுவார்கள் என்பது இப்போதைய உலக நடைமுறை. பேஸ்புக் தான் கூட்டிய கூட்டத்தை பயன்படுத்தி காசு சம்பாதிக்க விளம்பரங்களை காட்டுவது, விளையாட்டுகளை அறிமுகப்படுத்துவது என்று பல வழிகளில் முயன்று கொண்டிருந்தது.

சமீபத்திய பங்குகள் வெளியீட்டிற்கு பிறகு பேஸ்புக்கின் பங்குகளின் விலை ஆரம்ப விலையிலிருந்து ($38) பாதியாக குறைந்து விட்டிருக்கின்றது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பங்குச் சந்தை எதிர்பார்க்கும் லாப சதவீதத்தை காட்ட வேண்டும் என்று அழுத்தம் பேஸ்புக் நிறுவனத்தின் மீது அதிகமாகிக் கொண்டே போகிறது.

பயனர்களின் சமூக உறவுகளை காசாக்குவதற்கான புதிய புதிய வழிகளை தேடினால்தான் பேஸ்புக்கின் வருமானத்தை அதிகரிக்க முடியும். வருமானத்தை அதிகரித்தால்தான் பங்கு விலையை சந்தையில் தூக்கி நிறுத்த முடியும்.

பேஸ்புக்கில் லைக் என்ற விருப்பத்தை தெரிவிக்கும் பட்டன் அடிப்படையான ஒரு வசதி. அதன் மூலம் குறிப்பிட்ட கருத்து அல்லது ஸ்டேட்டஸை ஆதரிப்பதாக ஒருவர் தெரிவிக்கலாம். இன்னார் இன்ன கருத்தை ஆதரிக்கிறார் என்ற விபரம் அவரது பேஸ்புக் நண்பர்களுக்கு தெரிய வரும். அவர்களும் அதைப் போய் படிப்பார்கள். இப்படி ஒரு சமூக கருத்துப் பரிமாற்றத் தளமாக பேஸ்புக் வளர்ந்துள்ளது.

இந்த சமூக உறவு பரிமாற்றத்தை வணிக ரீதியில் அறுவடை செய்யும் முயற்சியில் இப்போது வோன்ட் அதாவது தேவை என்ற பட்டனையும் கலெக்ட் அதாவது சேகரி என்ற பட்டனையும் பேஸ்புக் அறிமுகம் செய்திருக்கிறது. பேஸ்புக்குடன் ஒப்பந்தம் போட்டுள்ள நிறுவனங்கள் தமது விற்பனை பொருட்களை தொகுப்புகள் (கலெக்சன்ஸ்) என்ற பெயரில் வெளியிடுவார்கள். அந்தப் பொருட்களுக்கு அருகில் வோன்ட் அல்லது கலெக்ட் என்ற பட்டன் காண்பிக்கப்படும். அதை அழுத்தினால் அந்தப் பொருளை தனக்கு தேவை என்று பட்டியலில் சேர்த்துக் கொள்ளவும் அந்தப் பொருளை பேஸ்புக்கின் வழிகாட்டலுடன் விற்பனையாளரின் தளத்திற்கு சென்று வாங்கிக் கொள்ளவும் முடியும்.

"இன்னார் இன்ன பொருள் தேவை என்று பதிவு செய்திருக்கிறார் அல்லது இன்ன பொருளை வாங்கியிருக்கிறார்" என்று அவரது பேஸ்புக் நண்பர்களுக்கு தெரிய வர இன்னும் அதிகமான பேர் அதை வாங்குவதற்கான சாத்தியம் ஏற்படும். ஏழு வர்த்தக நிறுவனங்களின் பொருட்கள் இந்தத் திட்டத்தின் கீழ் தற்சமயம் பேஸ்புக்கில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் சோதனை ஓட்டம் அமெரிக்காவில் மட்டும் நடத்தப்படுகிறது.

தீனி போட்டு கொழுக்க வைத்த ஆட்டுக் கிடாய்களை ஒவ்வொரு திருவிழாவுக்கு ஒன்றாக வெட்டி பொங்கல் வைப்பது போல சமூக வலைப்பின்னலுக்குள் பிடித்து வைத்துள்ள பயனர்களை வணிக நிறுவனங்களுக்கு பொங்கல் வைக்கத் தயாராகிறது பேஸ்புக். கூடிய சீக்கிரத்தில் வணிக அழுத்தம் அதிகமாக அதிகமாக இணையப் புரட்சியாளர்கள் தமது புரட்சியை நடத்த என்ன செய்வார்கள் என்பது கேள்விக்குறி.

பேஸ்புக் உங்களையும் உங்களது விருப்பங்களையும் விற்பனை செய்கிறது. அந்த விற்பனை உண்மையில் வணிக நிறுவனங்களின் பொருட்களை விற்பனை செய்ய உதவுகிறது. இறுதியில் பேஸ்புக்கின் உண்மையான உணர்ச்சி இந்த சரக்கு உணர்ச்சிதான் என்றால் முகநூல் புரட்சியாளர்கள் ஒத்துக்கொள்வார்களா?

# சாதுவான மலைப்பாம்பு



அமெரிக்காவின் கன்சாஸ் நகரத்தில் உள்ள மிருகக் காட்சிசாலை, மற்ற மிருகக் காட்சிச் சாலைகளை விட, வித்தியாசமானது. அடர்ந்த வனப்பகுதியிலோ அல்லது பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இடத்திலோ, இல்லாமல், மிகப் பெரிய பங்களாவில், செயல்பட்டு வருகிறது.

அரிய வகை விலங்குகள் சில, இந்த பங்களாவில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இங்கு வளர்க்கப்படும் விலங்குகளில், மிகவும் விசேஷானது மெதுஷா என பெயரிடப்பட்டுள்ள, பிரமாண்டமான மலைப் பாம்பு தான். இதன் நீளம், 25 அடி. எடை 136 கிலோ. இந்த மலைப் பாம்பை தூக்குவதற்கு, குறைந்தது, 15 பேராவது வேண்டும்.

மலைப் பாம்பு என்றதும், பீதி அடையத் தேவையில்லை. மான், முயல் போன்ற விலங்குகளைப் போல், மிகவும் சாதுவான குணமுடையதாக, மெதுஷா பாம்பு வளர்க்கப்பட்டுள்ளது. இதனால், இதை காண வரும் பார்வையாளர்கள், எந்தவித பயமும் இல்லாமல், அதன் அருகே அமர்ந்தும், அதை, தங்கள் மடியில் தூக்கி வைத்தும், புகைப்படத்துக்கு உற்சாகமாக போஸ் கொடுக்கின்றனர்.

முயல், மான், பன்றி போன்றவை தான், இதன் உணவு. 40 கிலோ எடையுள்ள விலங்குகளை, சர்வ சாதாரணமாக தின்று தீர்க்கிறது மெதுஷா. தற்போது அதற்கு, எட்டு வயதாகிறது. வயது அதிகரிக்க, அதிகரிக்க அதன் நீளமும், எடையும், மேலும் அதிகரிக்கும். பொதுவாக, மலைப் பாம்புகள், மனிதர்களையும் உண்ணும். இதனால், தொடக்கத்தில் அருகில் செல்ல, எல்லோரும் பயந்தார்கள். தற்போது, சாதுவான ஜந்து ஆகி விட்டதால், பார்வையாளர்கள், அதை செல்லமாக கொஞ்சுகின்றனர். உலகில், சிறைப்பிடித்து வைக்கப்பட்டுள்ள, உயிருள்ள மலைப் பாம்புகளில், மிக நீளமானது என்ற சாதனைக்காக, கின்னஸ் புத்தகத்தில், மெதுஷா இடம் பெறப் போகிறது.

# "கல்கி" தலையங்கத்திலிருந்து....

இலங்கையோடு இணக்கம் பாராட்டுவது இந்தியப் பாதுகாப்புக்கு அதிஅவசியம். இலங்கைத் தமிழர்கள் படும் துன்பங்களைக் களைவது என்பது வேறு, பாதுகாப்புக்குத் தேவையான நேச உறவைப் பேணுவது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்வதால், அவநம்பிக்கை அதிகரிக்கும். மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமைகளில் தலையிடுகிறது என்று குற்றம் சுமத்தும் ஜெயலலிதா, தம் கடிதங்கள் மூலம் மத்திய அரசின் உரிமைகளில் தலையிடுகிறார். உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வது என்பதற்கும் அதை பகிரங்கப்படுத்தி பிடிவாதமாக சாதிப்பதற்கும் வேறுபாடு உண்டு.

கருணாநிதியோ, இலங்கைத் தமிழர் மத்தியில் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்கவும், தனி ஈழம் என்ற எண்ணத்தோடும். முதலில் டெசோ மாநாட்டை கையிலெடுத்தார். மத்திய அரசின் தலையீட்டை ஒட்டி, "தனி ஈழத்துக்காக போராட்டம் நடத்தும் எண்ணம் இப்போது இல்லை" என்று உண்மை நிலை புரிந்து கொண்டு பேசியிருப்பவர் கூடவே, "தனி ஈழம் ஒரு காலத்தில் அமையலாம்" என்றும் இரட்டை நிலை எடுக்கிறார்.

தனி ஈழ கோரிக்கையை இன்று இலங்கையில் இருக்கும் தமிழ் எம்.பிக்களோ, மக்களோ கூட விரும்பவில்லை என்பதே உண்மை. இலங்கைக்குள், கூடுதல் அதிகாரங்களுடன், சுயாட்சியுடன் கூடிய சுகமான வாழ்வே அவர்கள் கோரிக்கை.

பேரறிஞர் அண்ணா, இந்திய ஒற்றுமையின் உன்னதத்தை உணர்ந்து கொண்டு, தனித் தமிழ்நாடு கோரிக்கையை பகிரங்கமாகக் கைவிட்டது போல், கலைஞரும் தனி ஈழ எண்ணத்தைக் கைவிட வேண்டும். தேவையற்ற இரட்டை நிலை, தொண்டர்களிடையே குழப்பத்தையும் சந்தேகத்தையும் மக்களிடையே அதிருப்தியையுமே ஏற்படுத்தும்.




இலங்கைத் தமிழர்கள் வாழ்நிலை மேம்பட கையாள வேண்டிய சாணக்கியம் வேறு. அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு, தலை நிமிர்ந்து தன்மானத்தோடு வாழவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதை வைத்துக் கூடுதல் புள்ளிகள் பெற முயலும் குறுகிய நோக்கம் மலினமானது, கொச்சையானது. அதனாலேயே கண்டிக்கத்தக்கது.

# மூன்று தகவல்!

() ஆண் சிங்கத்துக்குப் பிடரியில் ரோமம் வளர்வது 3ஆவது வயதில்.

() நத்தைகள் 3 ஆண்டுகள் தொடர்ந்து தூங்கும் திறன் கொண்டவை.

() 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாழ்நாளைக் கொண்ட ஆர்க்டிக் டெர்ன் பறவைகள் தங்கள் வாழ்நாளில் புலம்பெயரும் தொலைவு பூமியிலிருந்து நிலவுக்கு 3 முறை சென்று வருவதற்குச் சமம்.

() வாழைப்பழத்தோல் மக்கிப் போக 3 வாரங்கள் ஆகும்.


() ஒட்டகத்துக்கு 3 வயிறுகள் உள்ளன.

() வாடிகன் நகரில் 3 மொழிகள் புழக்கத்தில் உள்ளன. பேச்சுக்கு இத்தாலி, சடங்குகளுக்கு லத்தீன், வெளிநாட்டுத் தொடர்புக்கு பிரெஞ்ச்.

() நோபல், மகசேசே, பாரத ரத்னா ஆகிய 3 விருதுகளையும் பெற்ற ஒரே நபர் அன்னை தெரசா.

() 3 நிமிடங்கள் மட்டுமே பூத்திருந்து வாடிப் போகும் பார்லிப் பூ.

() பாடக் என்ற மரம் பர்மாவில் உள்ளது. இம்மரம் 3 முறை பூத்தால் நாட்டில் பருவ-மழை தொடங்கும்.



# புத்தியில்லை புத்தியில்லை!

கடையத்தில் பாரதியார் தங்கியிருந்தபோது, அப்போது அங்கே பாகவதர் ஒருவர் "வள்ளி திருமணம்" கதை சொல்லிக் கொண்டிருந்தார்.

காட்டில் வேடுவர்கள் பூசை போடும் முறையை விரிவாகக் கூறிக் கொண்டிருந்தார்.

அப்போது அவர் :

"கதை கேட்டுக் கொண்டிருந்த வேடர்களிலே ஒருவனுக்கு ஆவேசம் வந்து ஆடிப்பாடத் தொடங்கினான். அவன் பாடிய பாட்டு:

பாக்கு வச்சான், போயிலை வச்சான், பழமும் வச்சான், வெத்திலை வச்சான் - ஒண்ணு வைக்க மறந்துட்டான். சுண்ணாம்பில்லை... சுண்ணாம்பில்லை..." என்று பாடி முடித்தார் பாகவதர்.

இந்தக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த பாரதியார் உரக்கச் சிரிக்க ஆரம்பித்தார்.



"என்ன விஷயம்?" என்று கேட்டனர் அருகிலிருந்தவர்கள்.

"இந்தப் பாட்டு நம்ம ஜனங்களுக்கு ஒருவாறு பொருந்தும். மக்களுக்குக் கடவுள் நிலமும் வச்சான், பலமும் வச்சான், நிகரில்லாத செல்வமும் வச்சான்... ஒண்ணு வைக்க மறந்திட்டான்... புத்தியில்லை புத்தியில்லை..." என்று பாடிச் சிரித்தார் பாரதியார்.

# நிலவைத் துகிலென்று....

பெண் ஒருத்தி, ஆளன் முயக்கத்தில், ஆனந்த மயக்கத்தில், நிலவின் ஒளியைத் துகிலென நினைத்து கை நீட்டுகிறாள் எடுக்க - உடுக்க.

திங்கள் ஒளியைச் சேலையென எண்ணும் மங்கையின் மயக்கக் குழப்பத்தைக் கூறுகிறது கலிங்கத்துப்பரணி "கடைத்திறப்புக் காதை".

" ...... கலை மதியின்
நிலவைத் துகிலென்று எடுத்துடுப்பீர்
நீள்பொற் கபாடம் திறமினோ"

புதுமைப்பித்தனும் இதைத் தனக்கேயுரிய நையாண்டியுடன் பாடலாய் எழுதியிருக்கிறார்.

"வட்டமுலை மின்னார்
வசமிழந்த காமத்தால்
தொட்டுத் தடவி வந்து
துங்கமணி மாடத்தில்
தோயும் நிலாப் பிழம்பை
எட்டி எடுத்து இடைசுற்றி
ஆடையென ஒல்கி நடப்பதாய்
உவமை சொல...."



மங்கைக்கு மட்டுமா இப்படியோர் மயக்கம், மதகரிக்கும் இதேபோல் மயக்கம் உண்டு. எதிரிகளை வதம் செய்யும் போர் மதங்கொண்ட யானை ஒன்று. அடிக்கடி போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட சேரனின் அச்சினக்களிறு, படைகளின் தடைகளைக் கடந்துபோய் பகை மன்னனின் முத்துச்சரங்கள் முறுவலிக்கும் வெண்கொற்றக் குடையைப் பிடுங்கி நொறுங்கிப் போகும்படி தரையில் அடித்துப் பழக்கப்பட்ட அக்களிறு, விண்ணில் மிதக்கும் வெண்ணிலவைப் பார்க்கிறது. முழு நிலவு, வேழத்தின் பார்வைக்குப் பகை மன்னனின் வெண்கொற்றக் குடைபோல் தெரிகிறது. கோட்டானை தன் துதிக்கையை நீட்டுகிறது. நிலவைப் பறிக்க - நொறுக்க.

"வீறுசால் மன்னர்
விரிதாம வெண் குடையைப்
பாற எரிந்த
பரிச்சயத்தால் - தேறாது
செங்கண்மாக் கோதை
சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டும்தன் கை"
(முத்தொள்ளாயிரம்)

கலிங்கத்துப்பரணியில் நிலவை உடையென எண்ணி மயங்கினாள் பாவை ஒருத்தி முத்தொள்ளாயிரத்தில் நிலவைக் குடையென எண்ணி மயங்கியது ஒரு யானை. இவை இலக்கியத்துக்கு சுவை சேர்க்கும் கவிஞர்களின் கற்பனைத் திறம். இந்தக் கற்பனையைத்தான் ஒரு திரைப்படத்தில், "இரவுக்கும் பகலுக்கும் இனியென்ன வேலை" என்ற பாடலில் "ஆடை இதுவென நிலவினை எடுக்கும் ஆனந்த மயக்கம்" என்று கவிஞர் கண்ணதாசன் பாடினார்போலும்!

- இராஜேந்திரன் -

# அம்புலிமாமா

1945இல் பி.என்.குப்தா வெளியீட்டாளராக இருந்த "ஆந்திர ஜோதி" வார இதழை வாங்கி, சக்கரபாணியை ஆசிரியராகவும், நான் பிரிண்டர் வெளியீட்டாளர் எனவும் தீர்மானித்து தெலுங்கு மொழியில் ஆந்திர ஜோதி என்னும் அரசியல், சமூக விழிப்புணர்வைக் கொண்ட இலக்கிய மாத இதழாகத் தொடர்ந்து வெளியிட்டோம். ஆந்திர ஜோதியில் வெளியான சக்கரபாணியின் எழுத்துக்கள், கருத்துக்கள் அன்று மிகவும் பிரபலமாகின.

குழந்தைகளுக்கான பத்திரிகையை தெலுங்கிலும், தமிழிலும் கொண்டு வரலாமே என சக்கரபாணி ஆலோசனை கூறினார். புராணக் கதைகளில் மிகுந்த ஈடுபாடு




கொண்டிருந்த என்க்கு இந்த ஆலோசனை பிடித்துவிட்டது. சந்தமாமா (அம்புலிமாமா)வின் மூலம் இந்த புராணக் கதைகளை முத்ன்முதலாக குழந்தைகளுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் சந்தமாமா (தெலுங்கு), அம்புலிமாமா (தமிழ்) இதழ்களின் முதல் பதிப்பு வெளியானது. சக்கரபாணி சந்தமாமா இதழுக்கு ஆசிரியரானார். ஆங்கிலம் உட்பட 12 மொழிகளில் அதை வளர்த்தவர் சக்கரபாணி.

ஆரம்பத்தில் தமது புத்தகம் அச்சிடும் வேலை விஷயமாக வந்தவர்... அடுத்து ஆந்திர ஜோதி... நாளடைவில் சந்தமாமா பத்திரிகைகளில் ஆசிரியராகப் பங்கேற்ற சக்கரபாணியின் பொறுப்புணர்வு எங்களுக்குள் நட்பு என்னும் ஆலமரமாக வளர்ந்தது.

இந்த நட்புதான், பின்னாளில் படத்தயாரிப்பில் பார்ட்னர்ஷிப்பிற்கு அடித்தளமாக அமைந்தது. ஸ்டுடியோ நடத்தலாம் என்று திட்டமிட்ட போது, அதில் அவரும் பங்குகளை வாங்கிக் கொண்டார். விஜயா புரொடக்ஷன்ஸ் துவங்கி, முதல் படமாக அவருடைய சௌகார் கதையை அவரே வசனம் எழுதி எடுத்தோம். 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி சௌகார் படம் திரையிடப்பட்டது. அதில்தான் முதல் முறையாக தயாரிப்பு நாகிரெட்டி-சக்ரபாணி என்று டைட்டில் கார்ட் வந்தது. அதைத் தொடர்ந்து அவர் மறையும் வரை எங்களுடைய எல்லா தயாரிப்புகளிலும் அப்படியே டைட்டில் கார்ட் வந்தது.

படத் தயாரிப்பில் கதை, வசனம், டைரக்ஷன் எனத் தயாரிப்பு பொறுப்பு அவருடையது. விநியோகப் பொறுப்பு என்னுடையது என்று வேலைகளைப் பிரித்துக் கொண்டோம். அவருடைய வேலையில் நானோ, என்னுடைய வேலையில் அவரோ தலையிடுவதில்லை...

தொழில் என்று வரும்போது மிகவும் கண்டிப்பானவர். உதாரணத்திற்கு "மிஸ்ஸியம்மா" படத்தில் பானுமதி நடிக்க, இரண்டாவது ஷெட்யூல் ஷூட்டிங் நடைபெறும் நிலையில்... பானுமதி தாமதமாகப் படப்பிடிப்புக்கு வந்ததனால், சக்கரபாணிக்கும் பானுமதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.


இத்தனைக்கும் பானுமதியும் ஓர் எழுத்தாளர். சக்கரபாணியும் ஓர் எழுத்தாளர். தர்மபத்தினி பட காலத்திலிருந்தே இவர்கள் ஒருவரையொருவர் இலக்கிய வழியால் நன்கறிவார்கள். இருந்தாலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதில் தீவிரமாக இருந்தவர் சக்கரபாணி.

சக்கரபாணி பானுமதியைக் கூப்பிட்டு, "இனி உன்னை வைத்துப் படம் எடுக்க முடியாது" என்று சொல்லி பேசிய தொகையைக் கொடுத்து அனுப்பிவிட்டார். அதன் பின், அப்போது இரண்டாம் கதாநாயகியாக நடித்து வந்த சாவித்திரியைக் கதாநாயகியாக்கி மிஸ்ஸியம்மா தயாரிக்கப்பட்டது. சக்கரபாணி அந்த அளவிற்குக் கண்டிப்பானவர்.

"அம்புலிமாமா"வின் புகழ் உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. பதின்மூன்று மொழிகளில் அச்சிடப்படுகிறது. ஆறு வயது முதல் எண்பது வயது வரை அதற்கு வாசகர்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்கு அடித்தளம் அமைத்தவர் சக்கரபாணிதான்.

நூற்றி நாலு டிகிரி காய்ச்சலோடு படுத்து இருந்தாலும் அவரது கையெழுத்து இல்லாமல் ஒரு வரி கூட அச்சேறாது. அந்த அளவிற்கு அம்புலிமாமா பத்திரிகையில் ஈடுபாட்டோடு இருந்தார்.

சிறுவர்கள் பத்திரிகை என்றாலும் கூட, பெரியவர்களுக்கும் நீதி போதனைக் கதைகள் அதில் இருக்க வேண்டும். ஆனால் அது எந்த இஸத்திலும் கட்டுப்படக்கூடாது என்று சொல்வார். வெளியிலிருந்து வரும்




கதைகளை அவரே மறுபடியும் திருத்தி எழுதச் சொல்வார். எழுதுவார்.

படத் தயாரிப்பு, பத்திரிகைப் பணி இரண்டிலுமே அவருடைய பணி மதிப்பிட முடியாதது. காலையில் ஸ்டுடியோ. நண்பகலில் இரண்டு மணி நேரம் பத்திரிகைப் பணி மீண்டும் ஸ்டுடியோ, இரவு ஏழு மணிக்கு மேல் பத்திரிகைப் பணி இதுதான் அவருடைய அன்றாட அலுவல்.

அவருடைய வெற்றிக்குக் காரணம் பொது அறிவுடன்... சினிமா தயாரிப்பில் இரசிகனாக இருந்தார். அம்புலிமாமா பத்திரிகையில் வாசகனாக இருந்தார். இது மக்களுக்குப் பிடிக்கும். இது பிடிக்காது என்பதைத் துல்லியமாகச் சொல்வார்.

அவரையும் என்னையும் அவருடைய மரணத்தினால் மட்டுமே பிரிக்க முடிந்தது. எங்களுடைய விஜயா மருத்துவமனையில்தான் அவர் என்னைவிட்டு உடலளவில் பிரிந்தார்.

**(விஜயா வாகினி ஸ்டுடியோ மற்றும் மருத்துவ மனைகளின் அதிபர் நாகிரெட்டி நூலில்)**



# நாவல்: நமக்கு உலகத்தைப் பார்ப்பது எப்படி என்று சொல்லித் தருகிறது

சுந்தர ராமசாமி

**நா**வல் என்னும் மகத்தான கலை வடிவந்தான் பல்வேறுபட்ட ஜனநாயகப் பண்புகளை உலகத்துக்கு உருவாக்கியிருக்கிறது. நாவல்கள்தான் பல்வேறுபட்ட மனிதக் கூறுகளை நமது சமுதாயத்துக்கு கொடுத்திருக்கின்றன. ஜனநாயகக் கூறுகளை, மனித நேயம் சார்ந்த கூறுகளை, மனிதத் தன்மைகள் சார்ந்த கூறுகளை இந்த நாவல்கள்தான் வற்புறுத்தியிருக்கின்றன.

1940களின் தொடக்கத்தில் ஷண்முகசுந்தரம் எழுதிய 'நாகம்மாள்' ஒரு குறுநாவல். அதில் நாகம்மாள் என்று ஒரு கேரக்டர். பலர் படித்திருக்கலாம். கிராமத்தைச் சேர்ந்த அம்மா. அவர்தான் நாவலில் மையத்தில் இருக்கிறார். ஒரு படைப்பின் மையத்தில் எவ்வளவோ பேர் இருந்திருக்கிறார்கள். ராமன் இருந்திருக்கிறான். கிருஷ்ணன் இருந்திருக்கிறான். துரியோதனன் இருந்திருக்கிறான். அர்ஜுனன் இருந்திருக்கிறான். மிக உன்னதமான புருஷர்களெல்லாம் படைப்பின் மையத்தில் இருந்திருக்கிறார்கள். முதன்முதலாகச் சமுதாயத்திலிருக்கக்கூடிய ஒழுக்கம், அமுக்கக் கூடிய விஷயம் இவற்றை எல்லாம் ஏற்றுக்கொள்ளாத, மீறிப் போகக்கூடிய தன்னிச்சையான, தனக்காகவே சுதந்திரத்தை வரவழைத்துக்கொண்ட, என்னுடைய வாழ்க்கைய்ய நான்தான் தீர்மானிப்பேன், நீ என்ன சொன்னாலும் நான் கவலைப்பட மாட்டேன் என்னும் இயல்பு கொண்ட ஒரு பாத்திரம் - அதிலும் ஒரு பெண் பாத்திரம் - அந்த நாவலுடைய மையத்துக்கு வருகிறார். அந்த மாதிரி ஒரு நபர் வந்து ஊரிலிருந்தால் 'ஒரு மாதிரியான கேஸ்' என்று ஒதுக்கிவிடுவார்கள். ஊரில் அவரைப பற்றி மற்றவர்கள் சொல்லக்கூடிய அபிப்பிராயம். அபிப்பிராயம் என்பதைவிட ஒரு விமர்சனம் - எதிர்மறையான விமர்சனம் - இவர் மோசமான ஆத்மா, நல்ல ஆத்மா இல்லை என்று தொடர்ந்து திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி அந்த விமர்சனத்தையே அவர் தலைமேல் வைத்துக் கட்டி அந்த விமர்சனத்துடைய ஒரு வடிவமாகவே பார்க்கக்கூடியது சமூகத்தில் ஒரு பழக்கமாகப் போய்விட்டது. நாவலுக்குள் வரக்கூடிய சமயத்தில் என்ன ஏற்படுகிறது என்று பாருங்கள்.

நாவல் ஆசிரியர் இந்தப் பார்வையைத் தலைகீழாக மாற்றிப் போடுகிறார். அவர் அந்த நாவலை எழுத வந்ததற்கான காரணம் இவர் கூறுகெட்ட அம்மாவென்று சொல்வதற்கு அல்ல. இந்தக் கூறுகெட்ட அம்மாவுக்கும் கூறுள்ள அம்மாக்களுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறதென்று சொல்கிறார். எந்த. அம்மாக்களெல்லாம் உயர்வானவர்களென்று நினைத்துக்கொண்டு இருக்கிறீர்களோ அவர்களது மனிதத்தன்மை, அவர்களிடம் இருக்கக்கூடிய காதல், உறவுமுறை, திறமை, கெட்டிக்காரத்தனம், மனிதப் பண்பு எல்லாமே இவரிடமும் இருக்கிறது. இத்தனை விஷயங்கள் இருக்கும் சமயத்தில் இந்த ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே என்று அந்தப் பார்வையைத் திருப்பிப் போடுகிறார். பார்வையைத் திருப்பிப் போடுவதன் மூலம் உன்னதமான நாவல் என்று நீங்கள் சொல்வதோடு விஷயம் முடிந்துவிடவில்லை. ஓரம்கட்டப்பட்ட அம்மாக்கள் சமூகத்தில் மையத்துக்கு வந்துவிடுகிறார்கள். சமூகத்தோடு ஓரத்திலிருந்தவர் தட்டிக் கேட்கலாம், தட்டிக் கேட்பவர் அலுவலகத்துக்குள் வந்துவிட்டார். தட்டிக் கேட்பவர் கலெக்டராக வந்துவிட்டார். தட்டிக் கேட்பவர் ஆசிரியராக வந்துவிட்டார். யாருடைய பார்வை மாற்றம் அடைந்ததால் வந்தார்கள்? அந்த ஆணித்தரமான, அடிப்படையான ஒரு வாதத்தை முன்வைத்து வாழ்க்கை சார்ந்த ஒரு தர்க்கத்தை முன்வைத்து இந்தப் பார்வையை மாற்றியது யார்?

நாவல் ஆசிரியர்தான் அந்தப் பார்வையை மாற்றினார். உலகம் முழுவதும் மனிதருடைய பார்வையை அடிப்படையாக மாற்றியதில் நாவல் ஆசிரியர்கள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றனர். நான் எப்படி ஒரு நாவல் ஆசிரியருடைய பார்வை சமூகத்தைப் பாதிக்கிறது - அந்த இணைப்பை மட்டும் சொல்கிறேன்.

நாகம்மாளுக்குப் பின்னால் ஜானகிராமனுடைய இரண்டு நாவல்களை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். ஒன்று 'மோகமுள்'. மற்றொன்று 'அம்மா வந்தாள்'. இரண்டு நாவல்களிலும் இரண்டு அத்துமீறல்கள் இருக்கின்றன. மோகமுள்ளில் தன்னைவிட அதிக வயது கொண்ட யமுனா என்னும் பெண்ணை பாபு என்பவன் காதலிக்கிறான். பாபுவுக்கு வயது குறைவு. யமுனாவுக்கு வயது அதிகம். இதுதான் நாவலின் மையம். இவர் விஷயம் மோகமுள் எழுதுவதற்கு முன்னாடியே சமூகத்தில் உண்டா, இல்லை, இவர் மோகமுள் எழுதியதற்குப் பின்னர்தான் உருவாகியதா என்று கேட்டீர்களெனில், இவர் எழுதுவதற்கு முன்னரே வயதுக்கு மீறிய பெண்ணைக் காதலிக்கும் விஷயம் காலங்காலமாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நாகம்மாள்களும் காலங்காலமாய்ச் சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். அதற்கான பதிவு நிகழவில்லை. அந்தப் பதிவைத்தான் ஜானகிராமன் நிகழ்த்தியிருக்கிறார்.

நீங்கள் முதலில் படிக்கும் சமயத்தில் இந்த விஷயம் அருவருப்பாக இருக்கும். என்ன இது, ஒரு வயசுப் பையன் வயதுக்கு மீறிய பெண்ணைக் காதலிக்கிறானே என்று. ஆனால் நாவலைத் தொடர்ந்து படிக்கும் சமயத்தில் உங்களுடைய உணர்ச்சிக்கும் பாபுவுடைய உணர்ச்சிக்கும் நல்ல அளவுக்குப் பொதுவான உண்மைகள் இருக்கின்றன. அவனும் நம்மைப் போன்ற ஒரு மனிதன் என்பது வெளிப்படும். இந்த ஒரு விஷயம் நமக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம். ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால பல்வேறுபட்ட விஷயங்களில் யமுனாவும் சரி பாபுவும் சரி, மிக உன்னதமான ஆட்களாகத்தான் இருப்பார்கள். நம்மைப் போன்ற ஆட்களாகத்தான் இருக்கிறார்கள். இந்த ஒரு அளவுகோலை மட்டுமே வைத்து அவர்களைச் சமூகத்திலிருந்து விலக்குவது தவறான விஷயம் என்னும் மனோபாவத்தை உங்களுக்குத் தெரியாமலே அந்தப் படைப்பாளி நானூறு ஐநூறு பக்கங்களில் உருவாக்கி விடுகிறான். சமூகத்தில் இப்படியெல்லாம் இருக்கலாம். இதையெல்லாம் பெரிய விஷயமாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

அன்னா கரீனினாவிலேயும் இதுதான் நடக்கிறது. அன்னாகரீனினாவில் அந்தம்மா தற்கொலை செய்து இறந்து போகிறார். கணவன் இருக்கக்கூடிய சமயத்திலேயே வேறொருத்தனை நேசிக்கிறார். கடைசியிலே அந்த வாழ்க்கையில் வரக்கூடிய துன்பத்தை அதன் அழுத்தத்தைத் தாங்கமுடியாமல் தற்கொலை செய்துகொள்கிறார். தற்கொலை தவிர வேறெந்த முடிவும் எடுக்க முடியாத இடத்துக்குத் தள்ளப்படுகிறார். இன்று அதைப் போல் இருக்கிறதெனச் சொல்ல முடியாது. அவர் பக்கத்தில் ஒரு நியாயம் இருக்கிறதென்று சொல்லி ஆயிரம் பக்கங்கள் எழுதி ஒரு வாதத்தை முன்வைக்கிறார் டால்ஸ்டாய். கலைப்பூர்வமான வாதத்தை முன்வைக்கிறார். அந்த வாதத்தோடு நீங்கள் பயணம் செய்யும் சமயத்தில் மிகச் சிறந்த பெண்மணியாக அவர் உருவாகிறார். மட்டமாக, தவறாக, கீழ்த்தரமாக நீங்கள் கருதக்கூடிய பெண், மிகச் சிறந்த பெண்மணியாக உருவெடுக்கிறார். நான் ஆத்மார்த்தமாக யாரை நேசிப்பேனோ அவர்கூடத்தான் நான் வாழமுடியும், அதுதான் உண்மையான காதல் வாழ்க்கை, நம்முடைய வாழ்க்கையில் நாம் ஆத்மார்த்தமாக இல்லை என்பது அம்பலமாகிறது. நமது காதல் ஒரு பக்கமாகவும் நமது வாழ்க்கை இன்னொரு பக்கமாகவும் இருக்கிறது. நாம்தான் அந்த அம்மாவைப் பார்த்துத் தலை குனிய வேண்டியிருக்குதே ஒழிய, நம்மைப் பார்த்து அந்தம்மா தலைகுனிய வேண்டிய நிலையில் இல்லை என்பது அந்த நாவலிலே உணர்த்தப்படுகிறது.


அடுத்ததாக ஜெயகாந்தனுடைய 'ஒரு வீடு ஒரு மனிதன் ஒரு உலகம்' என்னும் நாவல். அதில் ஹென்றி என்று ஒரு கேரக்டர். அவன் மொத்த சமூகத்துக்கும் வெளியில் இருக்கிறான். நீங்கள் உருவாக்கி வைத்திருக்கக்கூடிய ஒழுங்குக்குள் வரவில்லை. சாதாரணப் பழக்கங்கள் - குளிப்பது, பல் தேய்ப்பது, உடை உடுத்துவது, மற்றவர்களிடம் பழகுவது - இவற்றுக்கெல்லாம் சில அடையாளங்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த அடையாளங்களுக்குள் அவன் வரவில்லை. இந்த அடையாளங்களுக்குள் வராத மனிதனைப் பார்க்கும்போது நீங்கள் பயப்படுகிறீர்கள். ஒரு மாதிரியான ஆளாக இருக்கிறான். ஏதாவது தப்புத்தண்டா பண்ணிவிடுவான், எங்களிடம் இருக்கும் வாழ்க்கையையும் சீர்குலைத்துவிட்டுப் போய்விடுவான். இவனை வீட்டுக்குள் விடலாமா? நாம் வீட்டுக்குள் ஒரு ஒழுக்கத்தை கட்டி வளர்த்துக்கொண்டிருக்கிறோம், அதில் மாற்றத்தை உருவாக்கிவிட்டுப் போய்விடுவானோ என்று சந்தேகப்படுகிறீர்கள். அறிந்தோ அறியாமலோ சமூகத்திலிருந்து ஒரு ஓரத்தில் ஒதுங்கிவிடுகிறான். அவனுக்குக் கிடைக்கக்கூடிய நண்பர்கள் குறைவாகப் போய்விடுகிறார்கள். உலகத்தில் நிறைய இடங்கள் இருந்தாலும் அவனுக்கான இடங்கள் மிகக் குறைவாகப் போய்விடுகிறது. இந்தச் சூழலுக்கு வந்ததற்குப் பின்னர்தான் நாவலில் பல விஷயங்கள் வருகின்றன.

தொடர்ந்து நாவலுக்குள் பிரயாணம் பண்ணிக்கொண்டு போகும் சமயத்தில் முதலில் நீங்கள் நினைத்தது போன்ற ஆள் அல்ல அவன். அவனுக்கென்று சில ஒழுங்குகள் இருக்கின்றன. சில கட்டுப்பாடுகள். அவன் பல விஷயங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறான். எனக்குப் படிக்கும் சமயத்தில் பல விஷயங்களில் என்னைவிடச் சிறந்த மனிதன் அவன் என்னும் எண்ணம் எனக்கு ஏற்பட்டு விடுகிறது. நான் என்னென்ன விஷயத்தில் சிறந்த மனிதன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேனோ, இல்லை கற்பனை பண்ணிக்கொண்டிருக்கிறேனோ அதைவிடச் சிறந்த மனிதனாக இருக்கிறான் எனும் விஷயம் எனக்குத் தெரிந்தது.

அப்படிப்பட்ட விஷயம் உருவாகும் சமயத்தில் யாரெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிறார்களோ, புறக்கணிப்புக்கு ஆளானார்களோ, அவமானத்துக்கு ஆளானார்களோ, யாரெல்லாம் ஒடுக்குமுறைக்கு ஆளானார்களோ அவர்களையெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாக நகர்த்தி நாவலின் மையப்பகுதிக்குக் கொண்டுவரும் காரியத்தை நாவலாசிரியர் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார். அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து கொண்டும் வருகிறார் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள்லாம். இது நாவலுடைய மிகப் பெரிய சமூகத்தளம் என்று நினைக்கிறேன்.

மட்டமாக, தவறாக, கீழ்த்தரமாக நீங்கள் கருதக்கூடிய பெண், மிகச் சிறந்த பெண்மணியாக உருவெடுக கிறார். நான் ஆத்மார்த்தமாக யாரை நேசிப்பேனோ அவர்கூடத்தான் நான் வாழமுடியும், அதுதான் உண்மையான காதல் வாழ்க்கை, நம்முடைய வாழ்க்கையில் நாம் ஆத்மார்த்தமாக இல்லை என்பது அம்பலமாகிறது. நமது காதல் ஒரு பக்கமாகவும் நமது வாழ்க்கை இன்னொரு பக்கமாகவும் இருக்கிறது. நாம்தான் அந்த அம்மாவைப் பார்த்துத் தலை குனிய வேண்டியிருக்குதே ஒழிய, நம்மைப் பார்த்து அந்தம்மா தலைகுனிய வேண்டிய நிலையில் இல்லை என்பது அந்த நாவலிலே உணர்த்தப்படுகிறது. நம்மிடமிருக்கும் ஒரு அளவுகோலை மட்டுமே வைத்து அவர்களைச் சமூகத்திலிருந்து விலக்குவது தவறான விஷயம் என்னும் மனோபாவத்தை உங்களுக்குத் தெரியாமலே அந்தப் படைப்பாளி நானூறு ஐநூறு பக்கங்களில் உருவாக்கிவிடுகிறான்.

# பனைசார் உற்பத்தியாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்



பனை சார் உற்பத்தியாளர்களும் அதிக வருமானத்தைப் பெற்று உயர் வாழ்வாதாரத்தை எட்ட வேண்டும் அதற்கான நடவடிக்கைளுக்கு இன்று நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு உதவு தொகை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவிததார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

இன்று வழங்கப்படும் இச் சிறு தொகை நிதியானது உங்கள்து இழப்பை ஈடுசெய்யுமென நான் கருதவில்லை. ஆனால் அங்கத்தவர்களை கௌரவப்படுத்தும் ஒரு செயற்பாடாகவே இம்முயற்சி அமைந்துள்ளது.

இன்று மக்களது நலன்களுக்காக உருவாக்கப்பட்ட பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. அவை நாளாந்தம் பல பிரச்சினைகளுடனும் இடர்பாடுகளுடனுமே இயங்கிவருகின்றன ஆனால் இப் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள் மட்டும் தமது அங்கத்தவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற கொள்கையை இறுகப் பற்றிப்பிடித்த வண்ணம் ஒற்றுமையுடனும் கடின உழைப்புடனும். அர்ப்பண உணர்வுடனும் முன்னேறிக் கொண்டிருப்பதனைக் காண முடிகின்றது. ஆகவே இச்சங்கங்களின் பலம்மிக்க செயற்பாடுகள் எதிர்காலத்தில் அவற்றைச் சார்ந்து நிற்கும் மக்களை மேம்படுத்தும் என்பதில். ஐயமில்லை ஆகவேதான் நாம் அவற்றை மேலும் பலப்படுத்துவதற்காகப் பாடுபட்டு வருகின்றோம் என்றார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனத்தின் பேரிணையம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூடடுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு சுமார் ஐம்பதாயிரம் ரூபா வீதம் நிதி உதவியினை வழங்கியது. இதில் சுமார் 72 குடும்பங்களுக்கு இருபதாயிரம் ரூபா வீதம் ஏற்கனவே வழங்கப்பட்ட நிலையில மிகுதி முப்பதாயிரம் ரூபா நிதியினை நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த 72 குடும்பங்களுக்கும் வழங்கிவைத்தார்.

வடமாகாண பனைதென்னை வள அபிவிருத்தி நிறுவன பேரிணையத்தலைவர் செல்வரட்ணத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேசசபைஉறுப்பினர் இராமச்சந்திரன்,பச்சிலைப்பள்ளி பிரதேசசபைஉறுப்பினர் தியாகராஜா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான தவராஜா,பத்மநாதன், ரவீந்திரநாதன் ஆகியோரும்.மற்றும் ஈ.பி.டி. பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் உள்ளூராட்சிவார வேலைத்திட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபையினால் இவ்வருடத்திற்கான உள்ளூராட்சி வார வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி வேலைத்திட்டங்கள் கடந்த 15ஆம் திகதி முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் இன்று புதன்கிழமை நடமாடும் வைத்திய சேவையும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையும் இடம்பெறவுள்ளதுடன், நடமாடும் சேவை மூலம் ஆதனவரி நிலுவை அறவிடல், நூலக அங்கத்துவத்தை அதிகரித்தல் மற்றும் துவிச்சக் கரவண்டி இலக்கத்தகடு வழங்கல் என்பன இடம் பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை சிறந்த சனசமூக நிலையங்களைத் தெரிவு செய்தல், பொதுமயானங்களைத் துப்புரவு செய்தல், மயான அபிவிருத்தி சபையுடன் தொடர்பு கொண்டு செயற்படுத்தல், சிறந்த உணவகத்தெரிவு, உத்தியோகத்தர்களுக்கிடையேயான பிரதேச சபை உள்ளூராட்சி தொடர்பான தகவல்களை அறியும் குழுப் போட்டி என்பன முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை திண்மக் கழிவு கொட்டும் மண்டான் பிரதேசத்தில் சிரமதானம் மூலம் பொலித்தீன் பைகளை அகற்றல் 20ஆம் திகதி உரிமக்கட்டணங்கள் விண்ணப்பப் படிவக்கட்டணங்கள் ஆகியவற்றின் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பாக வர்த்தமாணியில் பிரசுரித்தல்,22ஆம் திகதி பொலித்தீன் பாவனையைத் தடைசெய்வது தொடர்பாக சுகாதாரக் குழு, வர்த்தக சங்கம், சுற்றாடல் உத்தியோகத்தருடனான கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து இறுதி நாள் நிகழ்வில் வதிரி முன்பள்ளியின் குழுப்பாட்டு, கரவெட்டி முன்பள்ளியின் குழு நடனம், கட்டைவேலி முன்பள்ளியின் பேச்சு மற்றும் பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

குறித்த வேலைத்திட்டங்களை உரிய காலப் பகுதியில் செயற்படுத்துமாறு பிரதேச செயலர் பொறுப்பானவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (18)

# ஆன்மிக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டு பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் ஆன்மிக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆலய பூசை முடிவுற்றதும் 'தேவி பாகவதம்' (தொடர்) என்னும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் ஆன்மிக சொற்பொழிவாற்றவுள்ளார்.





'பிரதீபா பிரபா' ஜனாதிபதி விருது பெற்ற கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி ஜெ.தனபாலசிங்கம் அவர்களை பாராட்டும் முகமாக பாடசாலை சமூகத்தினரால் அழைத்துவரப்படுவதையும், கிளிநொச்சி அரசாங்க அதிபர் மதிப்பளிப்பதையும் காணலாம்.

# ஆயுர்வேதம்



## வயதான காலத்தில் வாயு தடை!

முதுமையில் உணவைக் கட்டுப்படுத்துவது அவசியம். மந்தமானதும் கனத்த பொருளும் ஜீரணமாகாது. ஜீரணமானாலும் உள்ளே சேராது. மலப் பொருளாக அதிகம் வெளியேறும். உடலைக் கனக்கச் செய்யும். வயிற்றில் காற்று, மலம், இவற்றின் அசைவைத் தடை செய்யும். முன்போல் உடல் உழைக்க மறுப்பதால், உழைப்பு குறையும். உழைப் பின்மையால் உணவின் அளவு அதிகமாகத் தேவை இராது. நாப் பழக்கம், சபலம் காரணமாக, அதிகமாக சாப்பிட்டால் உடல் கனத்து முதுமை நோய்கள் எளிதில் ஏற்படக் காரணமாகும். அதனால் எளிதில் செரிக்கக் கூடிய, வாயுத் தடை செய்யாத, மலச்சிக்கலை ஏற்படுத்தாத உணவை உண்பது நல்லது.

வயோதிகத்தால் வாயு தோஷத்தின் ஆதிக்கம் இயற்கையாகவே உடலில் கூடுகிறது. வாயு தோஷத்தின் ஆதிக்க் குணங்களாகிய வறட்சி, இலேசு, குளிர்ச்சி, நுண்ணியது, நகரும் தன்மை போன்றவை நரம்புகளில் வளர்ச்சியடைவதால்தான், தோல் சுருக்கம், எலும்புகள் துருத்திக் கொண்டு காணுதல், கூன் விழுதல், நடைத் தடுமாற்றம், மந்தமான பசி, புலன்களின் வலு குறைதல், தூக்கமின்மை போன்றவை ஏற்படுகின்றன. இவற்றுக்கு நேர் எதிரான நெய்ப்பு, கனம், சூடு போன்றவை மருந்தாகவும், உணவாகவும், செயலாகவும் கொண்டு வந்தால், தசைகளில் ஏற்படும் வலி குறைந்துவிட வாய்ப்பிருக்கிறது. அந்தவகையில் க்ஷீரபலா 101 எனும் கப்ஸ்யூல் மருந்து பயனுடையது. வெதுவெதுப்பான அரை டம்ளர் பாலில் 2 கப்ஸ்யூல், காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும்.

நரம்புகளின் வலுவைக் கூட்டும் தொடர்ந்து சாப்பிடக் கூடிய நல்ல ஒரு மருந்தாகும் இது. இதில் அடங்கியுள்ள நெய்ப்பும், கனமும், கால் நரம்புகளில் குடி கொண்டுள்ள வாயுவின் வறட்சியையும், இலேசான தன்மையையும் மாற்றி நரம்புகளுக்கு வலுவூட்டுவதால், அவை சென்றடையும் தசைப் பகுதிகளிலுள்ள வலியைக் குறைத்து நாளடைவில் குணமாக்கிவிடும்.


உட்புறத்திலிருந்து நரம்புகளின் வலுவைக் கூட்டுவதைப் போல, வெளிப்புற மூலிகை எண்ணெய் தேய்ப்பு முறையாலும், வலுப்படுத்தலாம். மஹா மாஷ தைலம், பலா அஸ்வகந்தாதி, வாதமர்தனம் குழம்பு போன்றவற்றில் ஒன்றை வெதுவெதுப்பாக இடுப்பிலும், கால்களிலும் தேய்த்து நீவிவிட்டு, சுமார் 30 – 45 நிமிட நேரம் ஊறிய பிறகு, வெந்நீரில் குளித்து பின்னர் மிளகுரசம் சேர்த்து சூடான உணவுண்டு வர, கால் நரம்புகள் வலுப்படும்.

அதிக நேரம் நின்று கொண்டே வேலை செய்வது, குளிர்ந்த தரையில் கால் பதித்து நிற்பது, குளிர்ந்த நீரில் நீராடுவது, உட்கார்ந்திருக்கும்போது தொடை கால்களை ஆட்டிக் கொண்டே பேசுவது, கால் மேல் கால் போட்டு அமர்வது, போதிய அளவு கால்களுக்கு ஓய்வு கொடுக்காமல் நடப்பது போன்ற செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

உணவில் காரம், கசப்பு, துவர்ப்புச் சுவையைக் குறைத்து இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவையை மிதமாகச் சேர்க்கலாம். வெதுவெதுப்பான நிலையில் உணவைச் சாப்பிட்டால் அதன் செரிமானம் குறித்த நேரத்தில் ஏற்பட்டு, உணவுச் சத்து உடலில் நன்றாகச் சேரும். உணவுக்குப் பிறகு சிறிது வெந்நீர் அருந்துவதும் நலமே. மாதமிருமுறை இலகுவான பேதிக்கு விளக்கெண்ணெய் சுமார் 10 – 15 மி.லி. காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால், குடல் பகுதியில் தேவையில்லாத வாயுவின் சேர்க்கையை பேதி மூலமாக நீக்கிவிடலாம். கந்தர்வஹஸ் தாதி ஆமணக்கு எண்ணெய் மருந்தை இதற்குப் பயன்படுத்தலாம். ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

# மாணவனின் பெறுபேற்று உயர்வுக்கு பெற்றோரின் ஊக்கப்படுத்தல் அவசியம்

## தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர்



(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டியதின் பெரும்பங்கு பெற்றோரையே சாரும். பாடசாலையில் சில மணிநேரக் கல்வி அவர்களது குழுவினைத் திறனையும் வளர்த்துக்கொள்ளாது என்று தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வண்.நாவலர் மகாவித்தியாலயத்தில் அந்தப்பாடசாலை மாணவன் குமாரவில்கம் ஜித்தன் மற்றும் மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதனைக கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். நகரில் பல பாடசாலைகள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை மையமாக்கி கல்வி புகட்டுகின்றன இருந்தும் வண்.நாவலர் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கும் இந்த மாணவர்களின் சாதனை பாடசாலையின் பெருமையை ஒருபடிமேலே உயர்த்தியிருக்கின்றது.


எனவே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக பாடசாலையில் கல்வி பயிலும் சில மணிநேரத்தில் மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்திவிட முடியாது. பெற்றோரும் மாணவர்களின் கல்வியில் ஊக்கமெடுக்கவேண்டும். அவர்களுக்கு அதில் 75 வீதம் பங்கு உள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பரீட்சைக்கு விடையளிக்கும் முறைகுறித்து ஆசிரியர்களால் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை இது ஒருகுறையாக இருந்து வருகின்றது. ஒரு பிள்ளைக்கு பரீட்சையின் போது எவ்வாறு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் எவ்வளவு நேரத்தில் விடையளிக்க வேண்டும் என்பது சொல்லித் தரப்பட வேண்டும். அப்போது தான் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். இது குறித்து அண்மையில் நாட்டின் ஒன்பது மாவட்டங்களில் ஆய்வுக் குட்படுத்தப்பட்டபோதே இவ்விடயம் தெரியவந்திருககிறது.

எனவே இவ்வாறு மாணவர்கள் கற்பிக்கப்படுவர்களேயானால் எமது மாணவர்களின் பெறுபேறுகள் உயர் நிலையை அடையும் எனவும் தெரிவித்தார்.

(பா)

# பரமர் சங்கமம்



"நம்ப நட நம்பி நடவாதை" இந்தப் பழமொழி சொல்லுவதென்ன? மற்றவர்கள் எங்களை நம்பும்படியாக நடந்து கொள்ள வேண்டும், மற்றவர்களை எடுத்த எடுப்பில் ஆழநீளம் தெரியாமல் நம்பி விடக்கூடாதெண்டதைத்தானே.

அப்புடியெண்டால் உலகத்தில் எல்லாமே உண்மையும், பொய்யும் கலந்ததாகத் தான இருக்கும் அதோட ஒரு திரிபு நிலையையும் வளர்த்து விடுவதாகவுமே இருக்குமல்லவா?

இதனடிப்படையில் தானே இன்டைக்கும் உலக நடைமுறை வளர்ந்து வருகிறது. இந்தப்பழமொழி தோன்றிப் பலதலைமுறைகள் கழிந்திருக்கும். அந்தக் காலம் தொட்டே பார்த்தால் இண்டைக்கு ஒருதரேம் நம்ப முடியாதல்லவா?

அதேவேளை புதிய தலைமுறையினருக்கு ஒரு எச்சரிக்கையாக, படிப்பினையாக அமைந்து விடுவதையும் தட்டிக்கழிக்க முடியாது.

இலக்கியம் எண்டில்லை அரசியலில் தான் இந்நிலைமை அதிகமாக வளர்ந்துள்ளது. உதாரணத்துக்கு சமீபத்தில் நடந்து முடிந்த கிழக்கு மாகாணத் தேர்தலிலும், நடக்க இருக்கும் வடக்கு மாகாணத்தேர்தலிலும் இந்த 'நம்ப நட நம்பி நடவாதை' எண்ட தாரக மந்திரத்தை உணர்ந்திருப்பதும் உணர இருப்பதும் குறிப்பிடத்தக்கதல்லவா?

அது போக இலக்கிய உலகிலும் இது அபரிமிதமாக நடைபெற்றுள்ள அதேநேரம் நடைபெற்று வருவதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றே!

அகில இலங்கை தேசிய மட்டத்தில் பல இலக்கியப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இவற்றில் எத்தனை போட்டிகள் ஒழுங்காக நடத்தப்பட்டுள்ளன? நடத்தி முடித்தும் பரிசுகள் வழங்கப்படாமல் இருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?

எனக்குத் தெரிஞ்ச அளவில் போட்டிகளில் பங்கெடுக்கக் கட்டணம் வசூலித்துக் கொண்டு 1976 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, கல்முனை, முத்தமிழக் கழகமும், 1997 ஆம் ஆண்டில் கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கமும் கவிதைப் போட்டிகளை நடத்தின. முன்னையது போட்டிகளின் முடிவுகளை அறிவித்ததுடன் சரி இதுவரை பரிசளிப்பைப் நினைத்துப் பார்க்கவில்லை...

கோப்பாய், செஞ்சிலுவைச் சங்கம் ஒரு முழுநாள் விழாவை நடத்தியது. அதில் கவியரங்காகவே போட்டி நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அது இன்று வரை நடத்தப்படாமலே இருக்கிறது.

1975 ஆம் ஆண்டு 'கலசம்' கொழும்பிலிருந்து வெளியான மாத இதழ் நடத்திய கவிதைப் போட்டி மற்றும் 2001 ஆம் ஆண்டு இந்து சமயப் பேரவை நேரடியாக எழுதும் கவிதைப் போட்டி ஆகியவற்றின் பரிசளிப்புகளும் இன்னமும் நடத்தப்படவில்லை.

2010 ஆம் ஆண்டு 'சீதனம்' சம்பந்தமான கருப்பொருளை வைத்து 50 ஆயிரம் ரூபா பரிசளிக்கும் போட்டி ஒன்று கொழும்பு, வெள்ளவத்தையை முகவரியாகக் கொண்டவர்களால் நடத்தப்பட்டது. முடிவுகள் வெளியிடப்படவில்லை.

அதன் பின் 2011 ஆம் வருடம் மே மாதம் முதலாம் திகதி வெளிவந்த 'எமதுகுரல்' மாதம் இருமுறை வெளியிடப்பட்ட இதழ். அதற்கனுப்பப்பட்ட ஆக்கங்களைப் பிரசுரித்து இரண்டு இதழ்களுடன் நின்றுவிட்டது. இவ்விதம் நம்பமுடியாத சங்கதிகளெல்லாம் நடக்கின்ற காலமிது இல்லையே பின்ன சொல்லுங்க பாப்பம்...

# கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் சமூக ஒருமைப்பாடு தொடர்பான சமூகப்பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான ஆரம்ப கலந்துரையாடல் கடந்த 10, 11ஆம் திகதிகளில் கண்டாவளை பிரதேச செயலகத்திலும், கரைச்சி பிரதேச செயலகத்திலும் நடைபெற்றது.

கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், காணி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் பங்கு பற்றினர். இதில் கல்விக்கான வாய்ப்புக்கள், பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்பு, பௌதீக சூழ்நிலை, சமூக வன்முறைகள், அரசியல் பங்குபற்றல்கள், போக்குவரத்து வசதி, உரிமைகள், மொழிப்பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (142)

# இளைப்பாறு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

மெலிஞ்சி முனை கிராம மக்களின் நன்மை கருதி சேவா லங்கா நிறுவனத்தின் மேற்பார்வையுடன் அமெரிக்க சர்வதேச வாழ்வாதாரத்திற்கான அபிவிருத்தி நிலையத்தின் நிதி உதவியுடனும் இளைப்பாறும் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த வெள்ளிக் கிழமை காலை 9.30 மணியளவில் கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் சின்னமணி தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக ஊர்காவற்றுறை ஜனநாயக கட்சி அமைப்பாளரும் பிரதேசசபை தவிசாளருமாகிய ம.ஜெயகாந்தன், அமெரிக்க சர்வதேச வாழ்வாதாரத்திற்கான செயலாளர் கந்தையா, சேவா லங்கா நிறுவனத்தின் பதில் தவிசாளர் நவரட்ணராஜா, சேவா லங்கா நிறுவனத்தின் யாழ் மாவட்ட பணிப்பாளர் கண்ணன், பிரதேசசபை உறுப்பினர் பிறின்ரன், கிராம சேவையாளர் தர்சன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

# முரசின் இன்றைய பலன்

(17.10.2012 – புதன்கிழமை)


நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 01 ஆம் திகதி.
நட்சத்திரம்: சுவாதி காலை 7.34 வரை. பின்னர் விசாகம். பின்னிரவு 5.58 வரை.
சித்தாமிர்த யோகம். திதி. துதியை பிற்பகல் 2.13 வரை.
இராகுகாலம் 12.02 - 1.32 வரை. சுபநேரம் 4.32 - 6.02 வரை
எமகண்டம் 07.32 - 9.02 வரை, குளிகன் காலம் 10.32 - 12.02 வரை.


சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.


| | |
|---|---|
| மேடம் | முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். அனுகூலம் தரும் புதியமாற்றம். தொழில் வளர உதவி. சராசரி பணவரவு. வழக்கு சாதகம். எதிர்கால யோசனை. சுபநிகழ்ச்சிக்கு திட்டம். |
| ரிஷபம் | புதிய மாற்றம். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள வருமானம். நண்பருக்கு உதவுவீர்கள். அரசு உதவி. வெளியூரிலிருந்து நற்செய்தி. உடல் ஆரோக்கியம். |
| மிதுனம் | இடையூறு விலகும். பூர்வசொத்தில் வருமானம் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம். இல்லறத்துணை விரும்பியது வாங்குவீர்கள். மாணவர்கள் படிப்புக்கு வசதி. புகழ் வரும். |
| கடகம் | வாக்குவாதம் கூடாது. போட்டி அதிகரிக்கும். சிக்கனம் சிரமம் குறைக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம். கடும் உழைப்பு. சாதனை புரிவீர்கள். பயன் அறிந்து பயணம் நல்லது. |
| சிம்மம் | மனவருத்தம் தரும் நிகழ்வுகள். அதிக உழைப்பு அவசியம். எதிர்பார்த்த பணவரவு. எதிர்பாராத செலவுகள். உடல்நலம் கவனம் அவசியம். பிள்ளைகளால் குழப்பம். பக்தி. |
| கன்னி | எதிர்பார்த்தபடி வெற்றிச்செய்தி. உறவினர், நண்பர்களின் பாராட்டு. தொழில் புதிய பரிமாணம். தாராள பணவரவு. விரும்பிய பொருள் வாங்குவீர்கள். புதிய பதவி பொறுப்பு. |
| துலாம் | மனதில் கூடுதல் தைரியம். தொழில் வகையில் அனுகூலம். குடும்ப ஆதரவு. புகழுக்கு மயங்கி செலவு. பயணத்திட்டத்தில் மாற்றம். நண்பர்களால் நற்செய்தி. மனதில் புத்துணர்வு. |
| விருச்சிகம் | பெரியவர்களின் வழிகாட்டுதல். உங்கள் பணி பாராட்டுபெறும். தொழில் வளர்ச்சி உண்டு. பணவரவு திருப்தி. குடும்பத்தின் தேவை நிறைவேற்றம். பாராட்டு, வெகுமதி. மகிழ்ச்சி. |
| தனுசு | எதிர்பாராத அவசரப்பணி ஏற்படலாம். தொழில், நண்பரால் உதவி. சொத்து சேர்க்கை வரும். சேமிப்பையும் செலவுக்கு எடுப்பீர்கள். பொருட்களில் கவனம் வேண்டும். சுபநிகழ்வு. |
| மகரம் | பேச்சில் விரக்தி. வாக்குவாதம் தவிர்ப்பதால் நன்மை. தொழிலில் புதிய யுக்தி. அளவான வரவு. உறவினர் உதவி. வாகன பயணத்தில் கவனம். குடும்பத்தில் பாசம். கோயில் வழிபாடு. |
| கும்பம் | நிதானம் நன்மை தரும். தொழில், இடர்களை சரிசெய்வீர்கள். பணத்தேவை அதிகரிக்கும். சமூக அந்தஸ்து உயரும். பழைய நண்பர் உதவுவர். போக்குவரத்தில் கவனம். புகழ் வரும். |
| மீனம் | பேச்சில் மங்கலத்தன்மை. அன்பும் நட்பும். புதியவர்கள் அறிமுகம். தொழில், இலக்கு நிறைவேறும். பணவரவில் முன்னேற்றம். விருந்து, விசேஷங்கள். மாணவர்கள் படிப்பில் தேர்ச்சி. |


## வாய்மொழி சிங்களப் பயிற்சி

**01) பின்வரும் நிறங்களை நிறம் தீட்டுவோம்.**

1) கொளபா(ட்)ட 

2) (Dh)து (B) புறு பா(ட்)ட 

3) (DH)தம் பா(ட்)ட 

4) கஹ பா(ட்)ட 

**02) அடைப்புக்குள் உள்ள தமிழ்ச் சொற்களைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புங்கள்.**

( தோட்டம், பூ, எழுத்து, புத்தகம், விறகு, ஆமை, முயல், பாடசாலை)

1) பொ(த்)த : ..................................

2) (DH)தற : ..................................

3) மல : ..................................

4) அக்குறு : ..................................

5) வத்த : ..................................

6) இப்(B)பா : ..................................

7) பாசல : ..................................

8) ஹாவா : ..................................

**03) தொடர்புபடுத்துவோம்**

| | |
|---|---|
| 1) பென்சல (G) கன்ன | வெளியே போங்கள். |
| 3) ரவுமக் (DH) துவன்ன | பாட்டுக் கேளுங்கள். |
| 3) பொ(TH)த தென்ன | பென்சிலை எடுங்கள். |
| 4) சிந்து அஹன்ன | புத்தகத்தைத் தாருங்கள். |
| 5) எலிய(ட்)ட யன்ன | வட்டமாக ஓடுங்கள். |

**04) இலக்கங்களுக்குரிய சிங்கள உச்சரிப்பை எழுதுவோம்.**

1) 5 : ..............................

2) 6 : ..............................

3) 10 : ..............................

4) 8 : ..............................

5) 2 : ..............................

6) 4 : ..............................

**தரம் 2-3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013**

# கல்வி முரசு


1 மணி



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

01) பின்வரும் சொற்சக்கரத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

உ + ம் : மலை




1) ..........................................

2) ..........................................

3) ..........................................

4) ..........................................

5) ..........................................

6) ..........................................

7) ..........................................

**02) பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.**

(செவிடர், ஊமை, கூனர், குருடர், முடவர்)

1) பார்வை இழந்தவர் : ..........................................

2) காது கேளாதவர் : ..........................................

3) வாய் பேசாதவர் : ..........................................

4) முதுகு வளைந்தவர் : ..........................................

5) நடக்க முடியாதவர் : ..........................................

**03) இணையுங்கள்.**

| | |
|---|---|
| 1) மாணவர் | கதிரவன் |
| 2) புகையிரதம் | கரும்பலகை |
| 3) வெண்கட்டி | சந்திரன் |
| 4) பகலவன் | தண்டவாளம் |
| 5) மதி | பாடசாலை |

**04) ஒழுங்குபடுத்திச் சொல்லாக்குங்கள்.**

1) ரை, ப், தா, பூ, ம ..........

2) ண், வெ, ம, டி, ட் ..........

3) வெ, க, டி, ட், ண் ..........

4) கூ, டு, ம, க், ணி ..........

5) ட, ம், க, ட, ட் ..........

**05) குறில், நெடில் சொற்களை எழுதுங்கள்.**

| | குறில் | நெடில் |
|---|---|---|
| 1) | பனை | |
| 2) | | நீலம் |
| 3) | பெட்டி | |
| 4) | | கோடி |
| 5) | வனம் | |

**06) சேர்த்தெழுதுங்கள்**

1) கடல் + கரை ..........

2) வீடு + தோட்டம் ..........

3) வாழை +பழம் ..........

4) முள் + செடி ..........

5) கல் + பூமி ..........

**07) பிரித்தெழுதுங்கள்**

1) பலாப்பழம் ..........


2) மலைநாடு ..........

3) தாமரைப்பூ ..........

4) குளக்கரை ..........

5) பூச்சாடி ..........

**08) படம் பார்த்து வாக்கியம் எழுதுங்கள்.**


..........


..........


..........


..........

**09) பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து எழுதுங்கள்**

(ஈ, கோ, ஆ, தா, சா, பூ, தீ, வா)

1) இறப்பைக் குறிக்கும் எழுத்து : ..........

2) தருமாறு கேட்கும் எழுத்து : ..........

3) அழைக்கப் பயன்படும் எழுத்து : ..........

4) பசுவைக் குறிக்கும் எழுத்து : ..........

5) இலையானைக் குறிக்கும் எழுத்து : ..........

6) அரசனைக் குறிக்கும் எழுத்து : ..........

7) நெருப்பைக் குறிக்கும் எழுத்து : ..........


8) மலரைக் குறிக்கும் எழுத்து : ..........

**10) படங்களுக்குரிய வாக்கியங்களை எழுதுங்கள்.**


பறவை பறக்கின்றது.
பறவைகள் பறக்கின்றன.


பட்டம் பறக்கிறது
பட்டங்கள் பறக்கின்றன.


ஆசிரியர் கற்பிக்கின்றார்.
ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்.


கப்பல் செல்கின்றது.
கப்பல்கள் செல்கின்றன.

# தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு இன்னும் 45 ஆண்டுகள் ஆகும்

## மணிசங்கர் ஐயர்

(ஹெண்ணூர்)
தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை பிடிக்க இன்னும் 45 ஆண்டுகளாகுமென மத்திய முன்னாள் அமைச்சர் மணிசங்கர் ஐயர் கருத்து கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியிலும், ஆட்சியிலும் தலைமை பொறுப்பை ஏற்பது குறித்து ராகுல் காந்திதான் தீர்மானிக்க வேண்டும்.

ஆனால், அவருக்கு அனைத்து வகையிலும் உதவ காங்கிரஸ் கட்சி தயாராகவே உள்ளது.

தமிழக காங்கிரசில் உள்ளவர்கள அனைவருமே தலைவர்கள் என்பதால் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு, ஆட்சியை இழந்த 45 ஆண்டு காலமே மீண்டும் தேவைப்படும் என்றார்.


இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு திட்டத்துக்கு தற்போது எதிர்ப்பு எழுந்துள்ளது.

ஆனால், இதற்கு முந்தைய குற்றச்சாட்டுகளான கோல் கேட், 2 ஜி, காமன்வெல்த் போன்ற ஊழல் பிரச்சினைகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என பது யாருக்குமே நினைவில்லை.

புதிதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளால் பழைய குற்றச்சாட்டுகள் வலுவிழந்து விடுகின்றன.

ஊழலை எதிர்ப்பதாகக் கூறி வரும் அரவிந்த் கேஜ்ரிவாலின் நடவடிக்கைகள் நகைப்புக்குரியவை என்றும் அவர் பா.ஜ.கவின் கைப்பாவையாகவே செயற்படுகிறார் எனவும் தெரிவித்தார்.

மேலும் லோக்பால் மசோதாவால் மட்டும் நாட்டில் ஊழலை ஒழித்துவிட முடியாது என கூறிய அவர், இது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடத்தில் தான் ஏற்பட வேண்டும் என்றார்.






# என் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துகிறார் நித்தியானந்தா

## முன்னாள் சீடர் ஆர்த்ராவ் தெரிவிப்பு

(ஹெண்ணூர்)
என் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் நித்தியானந்தா செயற்படுவதாக ஆர்த்திராவ் தெரிவித்துள்ளார்.

சுவாமி நித்தியானந்தா உட்பட 18 பேர் மீது ஆர்த்தி ராவ் பெங்களூர் ஹெண்ணூர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய சுவாமி நித்தியானந்தா மீது அவரின் முன்னாள் சீடர் ஆர்த்தி ராவ் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார்.

இது குறித்த வழக்கு விசாரணை கர்நாடக மாநிலம் ராம் நகர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இதற்கிடையில் கடந்த 2 ஆம் திகதி ஆர்த்தி ராவ் குறித்து நித்தியானந்தா கன்னட தொலைக்காட்சி ஒன்றில் பேட்டி அளித்தார்.

இதையறிந்த ஆர்த்தி ராவ், நித்தியானந்தா மீது பெங்களூர் ஹெண்ணூர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

இந்த புகாரில் நித்தியானந்தா விடம் சீடராக இருந்த போது என்னை ஏமாற்றி பல முறை பாலியல் வல்லுறவு புரிந்துள்ளார்.

இது தொடர்பாக ராம்நகர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளநிலையில் கன்னட தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு அவர் பேட்டியளித்தபோது, என்னைப் பற்றி அவதூறாகக் கூறியுள்ளார்.

நதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது, என் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட நித்யானந்தா உட்பட 18 பேர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று புகாரில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனது குழந்தையை கொலை செய்த தாய்

(புதுடில்லி)
கணவர் மீதான கோபத்தில் பிறந்து 10 தினங்களே ஆன பச்சிளங் குழந்தையை தரையில் அடித்துக் கொலை செய்த தாயை பொலிஸார் கைது செய்தனர்.

கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டம், அடிமாலி அருகே யுள்ள மலைவாழ் மக்கள் காலனியைச் சேர்ந்த சுக்குவின் மனைவி ஓமனாவுக்கு (வயது 24) கடந்த மாதம் 29 ஆம் திகதி பெண் குழந்தை பிறந்தது.

அப்போது உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சைக்குப் பின்னர் இம்மாதம் 9 ஆம் திகதி வீடு திரும்பினார்.

ஓமனாவை வீட்டில் தனியாக விட்டு சுக்கு, வனத்தில் விளைப் பொருட்களை சேகரிக்கச் சென்றார்.

தன்னுடைய உடல்நிலை முழுமையாகக் குணமடையாததால் குழந்தையை பார்த்துக் கொள்ளுங்கள் என சுக்குவிடம் ஓமனா பலமுறை கூறியுள்ளார்.

அதை மீறி சுக்கு காட்டிற்குச் சென்றதையடுத்து கணவர் மீதான கோபத்தில் குழந்தையின் கால்களை பிடித்து தரையில் அடித்து கொடூரமாகக் கொலை செய்தார்.

# ஈழத் தமிழர்கள் ஐவர் விடுதலை



(செங்கல்பட்டு)
தமிழர்கள் தொடர்ந்து நடத்திய போராட்டத்தின் விளைவாக இப்போது மேலும் ஐந்து ஈழத் தமிழர்கள் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பெயர்கள் வருமாறு, ஜெயதாசன், அலெக்ஸ், நாகராசா, நர்மதன், சதாசிவன் ஆகியவர்கள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


ஏற்கனவே நடந்த உண்ணாநிலைப் போராட்டத்தின் போது பொலிஸார் கண்காணிப்பாளர் சம்பத்குமார் படிப்படியாக முகாம் தமிழர்களை விடுதலை செய்வோம் என உறுதியளித்தார்.

அதன்படி சென்ற மாதம் ஏழு பேர்களும், இம்மாதம் ஐந்து பேர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 45 நாட்களில் இது வரை 16 தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தமிழர்களின் போராட்டத்திற்கு செவி சாய்க்கும்விதமாக சிறிது சிறிதாக தமிழக அரசு முகாம் வாசிகளை விடுதலை செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியச் செய்திகள்

# ஏலத்திற்குப் போகும் இந்திய வைரம்



(புதுடில்லி)
உலகின் மிகவும் மதிப்பு மிக்க இந்திய வைரம் ரூபா 80 கோடிக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மிகவும் மதிப்பு மிக்க வைரங்களாக கோகினூர், ரிஜண்ட், மற்றும் ஆர்ச்டியூக் ஜோசப் கருதப்படுகின்றன.

இதில் வரலாற்று சிறப்பு மிக்க அரிய இந்திய வைரங்களில் ஒன்றான ஆர்ச்டியூக் ஜோசப் ஏலத்திற்குச் செல்கிறது.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த கோஜஸ்வரர் ஜோசப் என்பவரிடம் இருந்தது. பின்னர் அவரது மகன் ஜோசப் பிரான்சிஸ் என்பவரிடம் இருந்தது.

76.02 கரட் எடையுள்ள இந்த வைரம் மிகவும் சுத்தமான பழுதற்ற தன்மை கொண்டது. கண்ணைப் பறிக்கும் கலரில் மின்னும் இந்த வைரம் ஜெனீவாவில் உள்ள கிறிஸ்டீ மையத்தில் வருகிற நவம்பர் 13 ஆம் திகதி ஏலம் விடப்படுகிறது. அப்போது இது ரூபா 80 கோடிக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு முன்னதாக வருகிற 13 ஆம் திகதி முதல் நியூயோர்க், ஹொங்கொங் மற்றும் ஜெனீவாவில் நடைபெறும் கண்காட்சிகளில் பொதுமக்கள் பார்வைக்கு இது வைக்கப்படுகிறது.

# காஷ்மீரில் மேலதிகமாக 12 ஹெலிகள்; பாதுகாப்பை பலப்படுத்துகிறது இராணுவம்

(புதுடில்லி)
இந்தியாவிற்கு சொந்தமான காஷ்மீரின் சியாச்சென் பனிமலைப் பகுதியில் கூடுதலாக 12 இலகு ரக ஹெலிகொப்டர்களை நிறுத்த இராணுவம் முடிவு செய்துள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் நாடுகளுக்கு மிகவும் உயரமான போர்முனைப் பகுதியாக சியாச்சென் "பனிமலை செயற்படுகிறது.

இங்குள்ள இந்தியப் பகுதிக்கு பாதுகாப்பை பலப்படுத்த 12 இலகுரக ஹெலிகொப்டர்களை நிறுத்த இந்திய இராணுவம் முடிவுசெய்துள்ளது.

இந்த ஹெலிகொப்டர்கள் பொதுத்துறை நிறுவனமான



இந்துஸ்தான் ஏரோநேட்டிக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட உள்ளது.

இது தவிர இந்திய இராணுவத்திற்கு 197 இலகுரக ஹெலிகொப்டர்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளதாகவும், இவற்றில் வான்படைக்கு மட்டும் 133 ஹெலிகொப்டர்கள் சேர்க்கப்பட உள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சேது சமுத்திரத் திட்ட வழக்கை ஒத்தி வைத்தது உச்ச நீதிமன்றம்

(புதுடில்லி)
இந்தியாவின் கனவுத்திட்டமான சேது சமுத்திர திட்டத்துக்கு எதிராக தொடர்ப்பட்ட வழக்கில் மத்திய அரசு அவகாசம் கோரியதால் வழக்கை உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.


பாக்கு நீரிணைப்பு மற்றும் இராமர் பாலம் பகுதிகளை ஆழப்படுத்தி கப்பல் போக்கு வரத்திற்கு உகந்ததாக மாற்றும் திட்டமே சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டம்.

இத்திட்டம் நிறைவேறும் பொழுது இக்கால்வாய் வழியாக செல்லக்கூடிய அளவும் வேகமும் கொண்ட கப்பல்கள் இந்தியப் பெருங்கடலிலிருந்து இலங்கையைச் சுற்றாமல் சேதுக் கால்வாய் வழியாக வங்கக் கடலை அடைய முடியும்.

300 மீற்றர் அகலமும் .12 மீற்றர் ஆழமும் 167 கி.மீ நீளமும் கொண்டதாக இத்திட்டம் செயற்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதை செயற்படுத்தக்கூடாது என்று உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு மீது உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.


அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மத்திய அரசு பதில் மனுத்தாக்கல் செய்ய கால அவகாசம் கோரினார்.



இதைத் தொடர்ந்து இந்த வழக்கின் விசாரணையை எதிர் வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு உச்சநீதிமன்ற நீதிபதி ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் இந்த வழக்கின் விசாரணையின் போது மத்திய அரசு பதிலளிக்க 6 வாரங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 40 ஆண்டுகால போருக்கு முடிவு;
# பிலிப்பைன்ஸ் அரசுடன் ஒப்பந்தம்



(மனிலா)

பிலிப்பைன்ஸ் அரசுக்கும், முஸ்லிம் போராட்டக்காரர்களுக்கும் இடையே வரலாற்று சிறப்பு மிக்க அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இதன் மூலம் மிண்டனாவ் மாகாணத்தில் நீடித்து வந்த 40 ஆண்டுகாலப் போராட்டம் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த ஒப்பந்தம் தலைநகர் மணிலாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அக்வினோ, மோரோ இஸ்லாமிக் லிபரேஷன பிரண்ட் (எம்.ஐ.எல்.எப்) அமைப்பின் தலைவர் முராத் இப்ராஹிம் மற்றும் மலேசிய பிரதமர் நஜீப் ரஸக் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் படி மிண்டனாவ் மாகாணத்தில் முஸ்லிம்கள் அதிக அளவில் வசிக்கும் பகுதி பாங்க்ஸ்மோரோ என்ற பெயரில் தன்னாட்சி அதிகாரத்துடன் செயற்படும்.

இதுகுறித்து பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அக்வினோ கூறுகையில், இந்த ஒப்பந்தத்தின் மூலம் மிண்டனாவ் மாகாணத்தில் போராட்டம் முடிவுக்கு வந்து அமைதி நிலவும் என்று நம்புகிறேன்.

இதன்மூலம் இப்பகுதி இனி வளர்ச்சி அடையும். வன்முறையைக் கைவிட்டு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

புதிய தன்னாட்சி பெற்ற பாங்ஸ்மோரோ சட்டத்துக்கு பிலிப்பைன்ஸ் நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கும் வரை இப்போது உள்ள நிலையே நீடிக்கும். இந்த ஒப்பந்தம் 2016ஆம் ஆண்டில் செயற்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மலேசியப் பிரதமரின் உதவியுடன் இந்த அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. எனினும் தனி நாடாக அறிவிக்க பிலிப்பைன்ஸ் அரசு மறுத்து விட்டது. இந்தக் கோரிக்கையை கைவிட வேண்டும் என்றும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

இயற்கை வளம் மிகுதியாக இருந்த போதிலும் போராட்டம் காரணமாக இந்தப் பகுதியின் வளர்ச்சி தடைபட்டு வந்தது.

முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதியை தனி நாடாக அறிவிக்கக் கோரி எம்.ஐ.எல்.எப் அமைப்பு கடந்த 40ஆண்டுகளாகப் போராடி வந்தது குறிப்பிடத்தக்கது.

## கைதிகளை விடுவியுங்கள்
## பிரான்ஸ் ஜனாதிபதி வேண்டுகோள்



அல்கொய்தா தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரெஞ்சு நபர்கள் ஆறு பேரை உடனே விடுவிக்குமாறு பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாலியின் வடக்கு பகுதியை அக்கிம் என்ற அல்கொய்தாவினர் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவர்கள் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஆறு நபர்களை பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

ஐ.நா சபை மாலியின் ஒருங்கிணைப்பு குறித்து எடுத்த தீர்மானத்திற்கு ஹோலண்டே ஆதரவு தெரிவித்தது இஸ்லாமிய போராட்டக்காரர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் ஹோலண்டே, அல்கொய்தா தீவிரவாதிகளை ஒழித்து விட்டு வடக்கு பகுதியை தென் பகுதியுடன் இணைத்து ஒரே நாடாக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் வடக்கு மாலியின் இஸ்லாமியர்களின் தலைவரான ஓமர் ஹமாஹா கூறுகையில், இந்த இயக்கத்தினரை மிரட்டுவதால் அவரது நாட்டு பிணைக் கைதிகளுக்கு அவரே நரகத்தின் வாயிலைத் திறந்து வைத்துள்ளார். மாலிக்குள் பிரான்ஸின் தலையீடு இருந்தால் பிரெஞ்சு நபர்கள் கொல்லப்படுவது உறுதி என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மேற்கு ஆபிரிக்காவிலும், பிரான்ஸிலும் கூட எங்களால் பிரெஞ்சுக்காரர்களை பணயக் கைதிகளாக வைத்திருக்க முடியும். அது எங்களுக்கு ஒன்றும் சிரமமான வேலை கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

## ஈரான் மீதான நடவடிக்கைகளை கடுமையாக்க ஜேர்மனி வலியுறுத்து

ஈரான் நாட்டின் மீதான நடவடிக்கைகளை இன்னும் கடுமையாக்க வேண்டும் என ஜேர்மனியின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர் வேலே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் லக்சம்பர்க்கில் ஐ.நா ஒன்றியத்தை சேர்ந்த வெளிவிவகாரத்துறை அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய அமைசசர் ஒருவர் ஐரோப்பாவுக்கும் ஈரானுக்கும் இடையிலான வங்கி தொடர்புகள் அனைத்தும் தடை செய்யப்பட்ட நிலையில், மருத்துவம் மற்றும் மனிதநேய அடிப்படையிலான சில சூழ்நிலைகளில் மட்டும் வங்கி தொடர்பு அனுமதிக்கப்படுகிறது என்றார்.

ஏற்கனவே நீண்டகால, இடைக்கால ஏற்றுமதிகள் தடை செய்யப்பட்டிருந்த நிலையில், குறுகிய கால ஏற்றுமதிகளும் இப்போது தடை செய்யப்பட்டு விட்டன.



யுரேனியம் செறிவூட்டுதலை நிறுத்தாத வரையில் ஈரானுடன் நட்பு பாராட்ட மற்ற நாடுகள் தயாராக இல்லை.

ஈரானின் மீது அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருகின்றது. ஈரானின் பொருளாதார நிலையும் மேலை நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் மிக மோசமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## விமானத்தை மீண்டும் பரிசோதித்தது துருக்கி



சிரியாவுக்கு சென்ற ஆர்மீனியா நாட்டின் சரக்கு விமானம் துருக்கியில் தரையிறக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்துக்கு எதிராகப் போராட்டக்காரர்கள் கடந்த 17 மாதங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களை ஒடுக்க அரச படைகள் வான்வழித் தாக்குதலை நடத்தி வருகின்றது. இத்தாக்குதலில் அப்பாவி பொது மக்களும், போராட்டக்காரர்களும் பலியாகி வருகின்றனர்.

அத்தியாவசியப் பொருட்கள் என்ற பெயரில் சிரியாவுக்கு செல்லும் விமானங்களில் ஆயுதங்கள் கடத்தப்படுவதாக அமெரிக்கா எச்சரித்திருந்தது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிலிருந்து சிரியாவின் டமாஸ்கஸ் நகரை நோக்கி கடந்த வாரம் சென்ற பயணிகள் விமானம் துருக்கியின் அங்காரா விமான நிலையத்தில் வலுக்கட்டாயமாக தரையிறக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

சிரிய விமானத்தில் ஆயுதங்கள் இருந்ததாக துருக்கி அரசு தெரிவித்தது. ஆனால் இதற்கு ரஷ்யா மறுப்பு தெரிவித்தது.

இந்நிலையில் ஆர்மீனியா நாட்டிலிருந்து சிரியா நோக்கி நேற்று முன்தினம் புறப்பட்ட சரக்கு விமானம், துருக்கியில் எர்ஜுரம் நகரில் தரையிறக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.இந்த விமானத்தில் ஆயுதங்கள் இல்லை எனத் தெரிந்த பிறகு சிரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## மக்களின் பார்வைக்கு

ஹொலிவுட் சினிமாவில் ஒரு காலத்தில் கவர்ச்சிக் கன்னியாகத் திகழ்ந்தவர் மர்லின் மன்றோ.


இரசிகர்கள் மட்டுமின்றி அரசியல் பிரமுகர்களையும் தனது வசீகரமான தோற்றத்தினால் கவர்ந்த மர்லின் மர்மமான முறையில் மரணம் அடைந்தார். கடந்த 1955ஆம் ஆண்டு வெளிவந்த படம் The Seven Year Itch. இந்தப் படத்தில் அவர் வெண்ணிற ஆடை அணிந்து நடனமாடினார்.

இந்த ஆடை மிகவும் பிரபலமானதுடன், அதன் மதிப்பு சுமார் 3 மில்லியன் பவுண் ஆகும்.மர்லின் மன்றோ மறைவுக்கு பின்னர், இந்த வெண்ணிற ஆடை தற்போது முதன் முறையாக இங்கிலாந்தில் நடைபெற இருக்கும் கண்காட்சி ஒன்றில் இடம்பெற இருக்கிறது.

## பாட்டி வைத்தியம் பிரச்சினையை அதிகரிக்கும்

பாட்டி வைத்தியம் என்ற பெயரில் பருக்கள் மீது வினிகர் பூசுவது சரும பளபளப்பிற்கு எலுமிச்சை சாறு பயன்படுத்துவது போன்றவை பிரச்சினையை மேலும் அதிகரிக்கத் தான் செய்யும் என, மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பிரிட்டனைச் சேர்ந்த, "கேர்" என்ற நிறுவனம் இது குறித்து ஆய்வு நடத்தியது. சருமத்தை மிருதுவாக்க பற்பசையை பயன்படுத்துவதாக 18 சதவீதம் தெரிவித்தனர். மற்றவர்கள் சமையல் எண்ணெய், எலுமிச்சை சாறு, தேன் போன்றவற்றைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். 65 சதவீத மானவர்கள் வீட்டில் இருக்கும் சமையலறைப் பொருட்களை, சருமப் பிரச்னைகளைச் சமாளிக்க தொடர்ந்தும் பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளனர்.. சரும வறட்சிக்கு, 20 சதவீதம் பேர், கை வைத்தியத்தைப் பின்பற்றுகின்றனர்.

## பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு





அமெரிக்காவை சேர்ந்த, ஆல்வின் ரோத், லாய்டு ஷெப்லே ஆகியோருக்கு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இலக்கியம், பொருளாதாரம், இயற்பியல், இரசாயனம், மருத்துவம் ஆகிய துறைகளில், சாதனை படைப்பவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த வாரம் மருத்துவம், இயற்பியல், இரசாயனம், இலக்கியம் ஆகிய துறையைச் சார்ந்த நிபுணர்களுக்கு, நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

அமைதிக்கான பரிசு ஐரோப்பிய யூனியனுக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கிடையே, பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு, அமெரிக்காவைச் சேர்ந்த அல்வின் ரோத், லாய்டு ஷெப்லே ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலை கழகத்தின் பொருளாதார பேராசிரியராக இருப்பவர். அல்வின் ரோத். கலிபோர்னியா பல்கலைக் கழக பேராசிரியர் ஷெப்லே. நிலையான விநியோகம் மற்றும் சந்தை விற்பனை நடைமுறை குறித்து, இவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியைப் பாராட்டி இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

## 29 வயதிலேயே முதுமை; கவலையடையும் பெண்கள்



முதுமை அடைவதை நினைத்து பெண்கள் 29 வயதிலிருந்தே கவலைப்படத் தொடங்குகின்றனர் என்பது புதிய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

சரும பராமரிப்பு லோஷன் தயாரிக்கும் லண்டன் நிறுவனமொன்று மனதளவிலும், உடலளவிலும் முதுமையை எப்படி எதிர்கொள்கின்றனர் என்பது குறித்து 2 ஆயிரம் பெண்களிடம் கருத்துக்கணிப்பும், ஆய்வும் நடத்தியது. இதில், பெரும்பாலான பெண்கள் பதின்ம வயதில் அதாவது 20 வயது வரை முதுமை குறித்த சிந்தனை இல்லாமல் மகிழ்ச்சியாகவே உள்ளனர். 29 வயதிற்கு பிறகு தங்களது தோற்றத்திற்கு பாதிப்பு ஏற்படுமோ என்ற கவலை மற்றும் சிந்தனை அதிகரிப்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கவலைப்பட்டால் மனம் மற்றும் உடல்நிலை பாதிப்படையும். முதுமை முன்கூட்டியே தாக்கும். இது ஆரோக்கியத்தைப் பாதித்து பல நோய்களை உண்டாக்கும். எனவே ஊட்டச்சத்துள்ள உணவுகள், தொடர் தியானம் மற்றும் உடற்பயிற்சி, நடைப்பயிற்சியுடன் அவ்வப்போது மருத்துவ பரிசோதனையும் செய்து கொண்டால் முதுமை, கவலை, மன உளைச்சல் இல்லாமல் ஆரோக்கியமான வாழ்வு வாழலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கடல் தொழிலுக்கு பாஸ் நடைமுறை நீக்கம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் கடற்படையினரால் மீண்டும் அமுல்படுத்தப் படவிருந்த பாஸ் நடைமுறை (தொழில் அனுமதி) பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக உடனடியாக நீக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கடற்படையினர் கடந்த ஞாயிறு மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம் பாஸ் (தொழில் அனுமதி) பெற்றுக் கொண்டதன் பின்னரே கடற்தொழிலில் ஈடுபடவேண்டுமெனப் பணிப்புரை விடுத்தனர்.

கடந்த காலங்களில் இவ்வாறான பாஸ் நடைமுறையால் தாம் எதிர்கொண்ட இடர்பாடுகள் தொடர்பாகவும், நீக்கப்பட்டிருந்த பாஸ் நடைமுறையை கடற்படையினர் மீண்டும் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் தாம் எதிர் நோக்க வேண்டிய பிரச்சினைகள் தொடர்பாகவும் நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியதுடன், இவ்விடயம் தொடர்பில் தமக்கு உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவர்களது கோரிக்கையை கவனத்தில் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் தொடர்பில் கடற்றொழில், நீர் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் கடற்படை அதிகாரிகளுடனும் மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம் அமுல்படுத்தப்படவிருந்த பாஸ்நடைமுறையை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டார்.

இதனையடுத்து இப்பாஸ் நடைமுறையை உடனடியாக நீக்குவதற்கும் தமது கடற்றொழிலை இயல்பாக மேற்கொள்ளுவதற்கும் உதவிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளர் தானியேல் றெக்சியன் (ரஜீவ்), நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.




சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் அரிமாக் கழகத்தின் அனுசரணையுடன் வவுனியா நகரசபையும், வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு வவுனியா பொது நூலகத்தில் பார்வையற்றோருக்கான நூல்நிலையத்தை திறந்து வைத்த கண்ணியல் நிபுணர் வைத்திய கலாநிதி எம்.மலரவன் பார்வையற்றோர் தொடர்பில் விளக்கமளிப்பதையும், கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (160)

# சாதனை வீரர்களுக்கு வவுனியாவில் வரவேற்பு

(வவுனியா)

அகில இலங்கை ரீதியில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக் கிடையில் இடம்பெற்ற மெய்வல்லுனர் போட்டியில் வவுனியா தேசியக் கல்லூரி இரண்டாமிடத்தை பெற்றதை அடுத்து கல்லூரியின் வீரர்களுக்கு வவுனியாவில் வரவேற்பு நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

18 தேசியக் கல்வியியல் கல்லூரிகள் ஊவா தேசிய கல்வியியல் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றியிருந்த நிலையில் 23 இடங்களில் வெற்றி பெற்ற வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி இரண்டாமிடத்தினை தனதாக்கி கொண்டது. வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியின் 19 வருட காலவரலாற்றில் முதன் முறையாக இரண்டாமிடத்தினை பெற்ற நிலையில் நேற்று வவுனியாவை வந்தடைந்த வீரர்களை பூந்தோட்டம் சந்தியில் இருந்து கல்லூரி வளாகம் வரை பாண்ட் இசை வாத்தியங்களுடன் சக மாணவர்கள் வரவேற்று அழைத்துச் சென்றிருந்தனர்.

15 ஆம் 16 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இப் போட்டிகளில் வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியைச் சேர்ந்த ஆண் வீரரொருவர் சிறந்த மெய்வல்லுனர் வீரர் என்ற விருதினையும் பெண் வீராங்கனையொருவர் சம்பியன் பட்டத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (160)

## டிசம்பர் 11 இல் பரீட்சை ஆரம்பம்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதிவரை இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வரம்பு மீறிய செயலுக்கு கண்டனம் பரு.பிரதேசசபையில் தீர்மானம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்தில் உள்ள வலிகாமம் தெற்கு பிரதேசபையின் செயலாளர் சுலோஜனா முருகநேசன் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் செயலாளர் ஜெயந்தா சோமராஜ் ஆகியோருக்கு எதிராக அச் சபைகளின் ஆளும் கூட்டமைப்புத் தவிசாளர்களால் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானங்களை எதிர்த்து பருத்தித்துறை பிரதேசசபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பருத்தித்துறை பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்ச்சி நிரலின்படி கூட்டம் நடைபெற்றது. கடந்த மாதக் கூட்ட அறிக்கை அங்கீகாரத்திற்காக கோரப்பட்ட போது கூட்ட அறிக்கை பிழை என ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர் தம்பிராசா மணீதரன் சுட்டிக் காட்டினார்.

கடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை குறித்து கூட்டக் குறிப்பில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கூட்டக் குறிப்பு புத்தகத்தில் அது பதிவு செய்யப்பட்டிருந்த போதும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்ட அறிக்கையில் அது குறிப்பிடப்படவில்லை. ஆனால் தவிசாளர் குறித்த தீர்மானம் நிறைவேறவில்லை என வாதிட்டார்.

ஆனால் உபதவிசாளரும் உறுப்பினர்களும் பலத்த விவாதங்களின் பின்னர் விடயங்களைத் தெளிவுபடுத்திய பின் தவிசாளர் ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. (116)

## மாதகலில்....

வழங்கவுள்ளார். இதேவேளை, நேற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தலைமையில் மேற்படி விடயம் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் இம்மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த விசேட கூட்டத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக மாதகல் மேற்கு பிரதேசம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 20 ஆம் திகதி கையளிக்கப்படுகின்றது. அதன்பின்னர் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த 250 வரையான குடும்பங்களை மீள் குடியேற்றவுள்ளோம். இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 20 ஆம் திகதிக்குப் பின்னர் வருகின்ற ஒருசில நாட்களில் இடம்பெறும் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

மக்கள் மீள்குடியேறும் போது அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்துவதற்கும் அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த மீள்குடியேற்றத்தின் போது அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் மீளக்குடியேறி வெற்றிகரமான மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் அவ்வாறு மக்கள் வெற்றிகரமான மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற போதே மீள்குடியேற்றத்திற்கு பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுத்து மீண்டும் பழைய மாதகல் பிரதேசத்தினை உருவாக்க முடியும்.

அத்தோடு மீள்குடியேறும் மக்களுக்கு அரசின் விதிமுறைகளுக்கு அமைவாக வீட்டுத்திட்டங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி ஏற்கனவே மீள்குடியேறிய மாதகல் கிழக்கு மற்றும் மாரீசன்கூடல் கரையோர வாழ் மக்களுக்கும் விட்டுத்திட்டங்கள் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப்பிரதேசங்களுக்கான ஏனைய உட்கட்டுமானம் மற்றும் வீதி, மின்சாரம் உள்ளிட்ட தேவைகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு அந்தப் பிரதேசங்களுக்கு அதிகாரிகள் குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்டு தேவைகள் இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனக் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், யாழ்.மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், யாழ்.மாவட்ட மீள்எழுச்சித் திட்ட பிரதிப் பணிப்பாளர் சுதர்சன், சண்டிலிப்பாய் உதவித்திட்டப்பணிப்பாளர் நிறஞ்சலா, கிராம அலுவலர் மற்றும் ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா, மாதகல் மேற்கு, கிழக்கு வாழ் மக்கள். மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## யாழ்.நீதிபதி...

கொண்ட மேற்குறித்த நீதவான் இடமாற்றம் செய்யப்பட்டமை, குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கப்படாத நிலைமை நீடிப்பதனை பறைசாற்றுவதாக பிளேக் சுட்டிக்காட்டியுள்ளார்.

2003 ஆம் அண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாணத்தில் நீதவானாக கடமையாற்றிய நீதவான் ஒருவரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டதாக இத்தகவல் மேலும் தெரிவிக்கிறது.

1996 - 1997 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 பேர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமை, யாழ்ப்பாண மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜிம் பிறவுனின் தலைமறைவு ஆகிய வழக்குகளை இந்த நீதவான் விசாரித்து வந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இந்த வழக்கு விசாரணைகள் ஸ்தம்பித நிலையை அடைந்தது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் பிளேக்குடன் கலந்துரையாடியதன் பின்னரே பதவிக் குறைப்புடன் இடமாற்றம் செய்யப்பட்டார் என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

## டெங்கு...

தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த தந்தையும், மகனும் அடங்குவதாகவும் தெரிய வருகிறது. (பா)

# விமானத்தை மீட்க அனுமதியில்லை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானத்தை மீட்பதற்குரிய அனுமதி இதுவரை கிடைக்கவில்லை. அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னரே மீட்டெடுக்கப்படும் என கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இரணதீவிற்கு அருகாமையில் உள்ள கடற்பரப்பில் குறித்த விமானம் மூழ்கியுள்ளது. 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி பலாலி ரத்மலான நோக்கிப் பயணித்த லயன் எயார் என்டனோவ் விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினர்.

## பொன்சேகா...

அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நாளை கொழும்பில் நடைபெறவுள்ள ஜனநாயக தேசியக் முன்னணியின் பேரணிக்கு, சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலரை இணைத்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில், சரத் பொன்சேகா ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களை இலக்கு வைத்தே செயற்படுகிறார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசிய கட்சி வழங்கிய ஆதரவிற்கு அவர் காட்டும் நன்றி விசுவாசமா இது என்று திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

## அகதிகள்...

அவுஸ்ரேலியாவின் எதிர்க் கட்சிகளின் குடிவரவுத்துறை பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் மற்றும் வெளியுறவு பேச்சாளர் ஜூலி பிஸப் ஆகியோர் நேற்று இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பம்பாங் யுதாயானோவை சந்தித்துள்ளனர். இதன்போது அவர்கள் தமது இலங்கை விஜயம் குறித்து குறிப்பிட்டதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

எதிர்வரும் ஒரு மாத காலப் பகுதிக்குள் தமது இலங்கை விஜயம் அமையும் என்று, இதன் போது இலங்கையில் பல்வேறு அரச அதிகாரிகளை சந்தித்து, இலங்கையர்களை அவுஸ்ரேலியா நோக்கிப் படகேறவிடாமல் தடுப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# படைகளுக்கு எதிராகத் தாக்குதல் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

(திருநெல்வேலி)

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்.மேலதிக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு சந்தேக நபர்களின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை நீதிபதி ஜெ.விஸ்வநாதன் நேற்று முன்தினம நிராகரித்து தீர்ப்பளித்தார்.

பெரியதம்பலகாமம்-பளையைச் சேர்ந்த பால சுப்பிரமணியம் ரவிக்குமார் (வயது 34) என்பவர் 20.04.2009 இல் முல்லைத்தீவு பொக்கணையில் வைத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

2006 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ஆம் திகதி முகமாலைப் பிரதேசத்தில் 75 பேர் கொண்ட குழுவொன்றுக்குப் பொறுப்பாகவிருந்து இராணுவத்திற்கெதிராகத் தாக்குதல் நடத்தியது, 2006 ஆம ஆண்டு ஆவணி மாதம் 2 ஆம் திகதி முகமாலையில் 45 பேருக்குத் தலைவராகவிருந்து, இராணுவத்துக்கெதிராகத் தாக்குதல் தொடுத்தது, 2000 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28 ஆம் திகதி யாழ்ப்பாணம், தள்ளாடி என்னும் இடத்தில் ஆயுதங்கள், மற்றும் உணவு என்பவற்றை விநியோகம் செய்தது, 2006 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ஆம் திகதி 80 பேருக்கு மரணத்தையும், மறுநாள் 86 இராணுவத்தினருக்கு மரணம் விளைவித்தமை, இயக்கத்திலிருந்து பேராயுதப் பயிற்சி பெற்றமை என ஐந்து குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. கடந்த பங்குனி மாதம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இவரால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் இவருக்கெதிரான சான்றுப் பொருளாக இருந்தது. இவ்வாக்கு மூலம் எதிரியினால் சுயமாக வழங்கப்படவில்லை எனவும் பலாத்தகாரம் பிரயோகிகக்கப்பட்டே பெறப்பட்டது எனவும் மேல் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்த எதிரியின் சட்டத்தரணி மு.றெமீடியஸ், வாக்கு மூலத்தை நிராகரிக்கும்படி வேண்டினார்.

பொலிஸ் அதிகாரி ஒருவரும், தட்டச்சாளர், மொழிபெயர்ப்பாளர் என இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சாட்சியமளித்தனர். இதனையடுத்து, சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைய இவ்வாக்கு மூலம் பதிவு செய்யப்படவில்லை எனத்தெரிவித்து நீதிபதி வாக்குமூலத்தை நிராகரித்துத் தீர்ப்பளித்தார். எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக எதிர்வரும் 5 ஆம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு எதிரி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மற்றொரு வழக்கில் வீமன்காமம் - தெல்லிப் பழையைச் சேர்ந்த இரத்தினம் ரவிச்சங்கர் (வயது - 45) என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தை பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் 17.05.2009 இல் ஓமந்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்து 1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 25 ஆம் திகதி இராணுவத்துக்கெதிராகக் கிளைமோர்த் தாக்குதல் நடாத்தியது என இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கடந்த ஆடி மாதம் 4 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவருக்கெதிராக இருந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலமும் மேல் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. எதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக இவ்வழக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இரண்டு வழக்குகளிலும் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜரானார். அரசு தரப்பில் அரச சட்டத்தரணி நளாயினி கந்தசாமி ஆஜரானார். (137)

# 50 இலங்கைத்தமிழர்களை அவுஸ்ரேலியா விடுவிக்கும்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் புலனாய்வுத் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 இக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் எதிர்வரும் காலத்தில் விடுவிக்கப்படவுள்ளதாக அவுஸ்ரேலியாவின் த கார்டியன் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஆசியோ எனப்படும் அவுஸ்ரேலிய பாதுகாப்பு புலனாய்வுத் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். பாதுகாப்பு விசா வழங்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை சட்டத்துக்கு முரணானது என்று அவுஸ்ரேலிய மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

எவ்வாறாயினும், இந்தத் தீர்ப்பு குறித்த வழக்கினை தாக்கல் செய்திருந்த ஒருவருக்கேயன்றி, ஏனையவர்களுக்காக அல்லவென்று அவுஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையவர்களும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். அதன் அடிப்படையில் அவர்கள் எதிர்வரும் காலங்களில் விடுவிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ரிசாத்தின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த சம்பவம் தொடர்பாகத் தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் இருந்து தன்னை முற்றாக விடுதலை செய்யுமாறு கோரி, அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேற்று உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சட்டத்தரணிகள் சிலர், அமைச்சருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய் துள்ளனர். இதற்கு எதிராக அமைச்சர் பதியுதீன் தாக்கல் செய்த அடிப்படை எதிர்ப்பு மனு நிராகரிக்கப்பட்டதுடன், எதிர்வரும் பெப்ரவரி மாதம் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்து கொள்வதென நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

# இன்று பேரணி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், நில ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் யாழ்.நகரில் இன்று கண்டனப்பேரணி நடைபெறவிருக்கின்றது. கூட்டமைப்பினர் இப்பேரணியை ஏற்பாடு செய்துளளனர்.



ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை குவைத்தில் ஆரம்பமாகியது. குவைத் அமீர் ஷெய்க் சபா அல் - அஹமட் அல் - ஜபார் அல் சபா தலைமையில் ஆரம்பமான இந்த மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சவூதி அரேபிய மன்னர் மற்றும் கட்டார் அமீர் உள்ளிட்ட 32 அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டின் நேற்றைய அமர்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிசேட உரையாற்றும் போது...

# சிங்களவர்களும் "றோ" வில் இணையலாம்

(கொழும்பு)

இந்தியாவின் புலனாய்வுத்துறையான றோ புலனாய்வு சேவையில், சிங்கள மொழி தொடர்பான அறிவுள்ளவர்களை இணைத்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமது விசாரணைகளை மிகவும் இலகுவாக மேற்கொள்வதே இதன் ஒரு நோக்கமாகும் எனத் தெரிவித்துள்ள றோ, இதற்காக பெருமளவிலான சிங்களவர்களை இணைத்துக் கொள்ளத் தயாராகிவருகிறது.

சிங்கள மொழிக்கு அடுத்தப்படியாக ஆப்கானிஸ்தானின் பாஸ்தோ, ஈரானின் தாரி, சீனாவின் மண்டரின், மியன்மாரின் மியன்மாரி ஆகிய மொழிகளை அறிந்தவர்களையும் பணியில் சேர்க்க 'றோ' அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இந்த மொழிகளை அறிந்தவர்கள் பணியில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர்கள் இந்தியாவின் பல இடங்களிலும் அந்த மொழிகளுடன் தொடர்புடைய நாடுகளிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்தியப் பிரதமரின் நேரடியான கண்காணிப்பின் கீழ் இயங்கும் றோ புலனாய்வு சேவை, உலகில் உள்ள புலனாய்வு சேவைகளில் முன்னணி புலனாய்வு சேவையாகும்.

# எழுவான் - படுவான் கரைகளை இணைக்கும் பாலத்திற்கு அடிக்கல்

மட்டக்களப்பின் எழுவான்கரையையும் படுவான்கரையையும் இணைக்கும் மண்முனை பாலத்தின் அடிக்கல் நாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் ஜப்பானியத் தூதுவர் நொபுகிரோ றோபேர் ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜித்,, சிறுவர் மற்றும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஜப்பான் நாட்டின் நன்கொடையில் படுவான் கரையையும் எழுவான்கரையையும் இணைக்கும் வகையில் மண்முனை ஆற்றுக்கு மேலாக அமைக்கப்படவுள்ள இப்பாலத்துக்கான ஆரம்ப வேலைகளை அண்மையில், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தொடக்கி வைத்திருந்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ், பிரதேச செயலாளர் வில்வரெத்தினம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இப்பாலம் 210 மீற்றர் நீளமாகவும் 9.8 மீற்றர் அகலமாகவும் அமையவுள்ளதுடன், மேற்குப் பக்கம் 195 மீற்றர் அத்துடன் கிழக்குப் பக்கம் 293 மீற்றர் நீளமும் கொண்ட தாம்போதிகளும் அமையவுள்ளன.

இப்பாலம் ஜப்பானின் 1473 மில்லியன் ரூபாய் செலவிலும் இலங்கை அரசின் 393 மில்லியன் ரூபாய் செலவிலும் அமைக்கப்படவுள்ளது.

# சிறிசேனாவுக்கு விளக்கமறியல்

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான பிரியந்த சிறிசேனவை இம்மாதம் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலன்னறுவை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வனவிலங்கு லாகா அதிகாரிகளின் செயற்பாட்டுக்கு கடந்த 5ஆம் திகதி குந்தகம் விளைவித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் பொலிஸில் சரணடைந்ததை அடுத்தே, பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தினர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

# ஹஜ் பெருநாள் 27 ஆம் திகதி

முஸ்லிம்களை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை புனித ஹஜ் பெருநாளை கொண்டாடுமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் இன்று செவ்வாய்க் கிழமை இரவு அறிவித்தது.

ஹிஜ்ரி 1433 புனித துல்ஹிஜ்ஜா மாதத்திற்கான தலைப் பிறை நேற்று செவ்வாய்க் கிழமை இரவு நாட்டின் எந்தவொரு பாகத்திலும் தென்படவில்லை. இதற்கமையவே 27 ஆம் திகதி இலங்கை வாழ் முஸ்லிம்கள் பெருநாளை கொண்டாடுமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

புனித துல்ஹிஜ்ஜா மாதத்திற்கான தலைப்பிறை தீர்மானிக்கும் மாநாடு இன்று செவ்வாய்க் கிழமை ம.்.ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஹமீதிய்யா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இயதுல் உலமா சபை பிரதிநிதிகள், கொழும்பு பள்ளிவாசல் நிர்வாக சபையின் பிரதிநிதிகள், முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்கள பிரதிநிதிகள் மற்றும் ஷரீயா கவுன்ஸில் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

புனித ஹஜ் பெருநாள் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப் படும் ஏன்று நாட்காட்டிகளில் ஏற்கனவே அறிவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாக்.தூதரக அதிகாரி மீள அழைக்கப்பட்டார்

(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் உளவுப் பணியில் ஈடுபட்ட கொன்சோல் அதிகாரியை அந்நாடு மீள அழைத்துக் கொண்டுள்ளது. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவுப் பிரிவுடன் கொன்சோல் அதிகாரி அமீர் சுபைர் சித்திக் என்ற அதிகாரிக்கு தொடர்பு இருப்பதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

தென் இந்தியாவின் இராணுவ இரகசியங்களை அறிந்து கொள்ள குறித்த அதிகாரி முயற்சித்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. உளவுப் பணிகள் தொடர்பான தகவல்கள் அம்பலப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து குறித்த அதிகாரியை பாகிஸ்தான் மீள அழைத்துக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.